www.padippakam.com

துலை (அக் - நவம்பர் - 94) உயவரு

# உழைக்கும் மக்கள் தமிழகம்



## பிளேக்'கும் — பிள்ளையாரு

தமிழக அரசியல் — பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

## காஞ்சி சங்கரப் பார்ப்பான்களின் ஆதிக்க வெறித்தனம்! - அவா(ல்)ள்களின் ஒப்புதல் வாக்குமூலம்!

❑ ஹரிஜன் ஆலயப் பிரவேச விஷயத்தில் சாஸ்திரங்களையும் பழைய வழக்கங்களையும் நம்பி இருப்பவர்கள் நம் நாட்டில் பெரும்பாலோர் இருக்கிறார்கள். அவர்கள் மனம் நோகும்படிச் செய்யும் எந்த மாறுதலும் இம்சைக்கு ஒப்பாகும் என்றே நாம் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

**– காஞ்சி பெரிய சங்கராச்சாரி**

❑ குழந்தைகள், கட்டுப்பாடான சூழ்நிலையில் அறநெறி, நேர்மை, தெய்வபக்தி மற்றும் தேசப் பற்றுடன் வளர அவர்களை ஆர்.எஸ்.எஸ் முகாம்களில் பயிற்சி பெற பெற்றோர்கள் அனுப்ப வேண்டும். உலகத்திலேயே இத்தகைய சிறப்பு கொண்ட ஒரே அமைப்பு ஆர்.எஸ்.எஸ். தான்.

**– ஜெயேந்திரர் – 5.6.82 – (தினமணி)**

❑ இந்து மதத்தில் இப்போது இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். அசோசியஷன்கள் தோன்றி உள்ளன. குட்டக் குட்டக் குனியக் கூடாது என்பதற்காகத்தான் தோன்றியிருக்கின்றன. இத்தகைய சங்கங்கள் இன்றைய அவசியம் கருதித் தோன்றி இருக்கின்றன. அவர்கள் மீது அரசு வீணாகத் தப்புக் கணக்குப் போட வேண்டாம். அவர்கள் ஒன்றும் கன்னியாக் குமரியிலோ, வேறு எங்குமோ வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

**(சங்கரப்பார்ப்பான் – 1982)**

❑ ஜனகல்யாண் - ஜன ஜாக்ரன் (சங்கராச்சாரி தொடங்கிய) அமைப்பு குறிப்பிடும் அம்சங்களாவன: பசுவைத் தேசிய விலங்காக அறிவிக்க வேண்டும். இந்தியாவை ஹிந்துஸ்தான் என்று அழைக்கவேண்டும், சமஸ்கிருதத்தை தேசிய மொழியாக்க வேண்டும் 'சத்யமேவ ஜெயதே' (வாய்மையே வெல்லும்) என்ற வாசகத்துடன் 'தர் மோர க்ஷதி ரக்ஷி தஹ' என்ற வாக்கியமும் அரசு இலச்சினையில் இடம் பெற வேண்டும்; அனைவருக்கும் பொதுவான குடும்பச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

**– 1987.**

❑ பிராமணன் ஸ்தூலமாக (உண்மையாக) பிராமணன் அல்லாதவனோடு ரொம்பவும் ஒட்டி வாழ்ந்தால், அவனுடனேயே உட்கார்ந்து கொண்டு இவனும் சாப்பிட்டால், அவனுடைய ஆகாரங்களை நாமும் தான் ருசிபார்ப்போமே என்ற சபலம் உண்டாகத்தான் செய்யும். அந்த சபலம் இவனை (பார்ப்பானை) இழுத்துக் கொண்டு போய்க் கடைசியில் இவன் தர்மத்துக்கே ஹானி (துன்பம்) விளைவிக்கிற அளவுக்கு ஆகிவிடும். அந்தந்தச் சமுதாயத்துக்கு அந்த அந்த குலதர்மம், பழக்க வழக்கம், ஆகார முறைகள்தான் உகந்தவை. ஆனால் சமத்துவம் என்ற எண்ணத்தில் ஸ்தூலமாக (உண்மையாக) எல்லாரும் பழகி, இந்தத் தனித்தனி ஏற்பாடுகளையெல்லாம் பல்பட்டறையாகக் குழப்ப ஆரம்பித்தால், அத்தனைக் காரியமும் கெட்டு, மொத்தத்தில் பொதுக் காரியமே சீர்குலைந்து போகிறது. இதனால்தான் அக்ரஹாரம், வேளாளர் தெரு, சேரி என்று கிராமங்களில் பிரித்து வைத்தார்கள்.

**(தெய்வத்தின் குரல் – பாகம் 1 – பக் – 192)**

❑ ராஜாவுக்கு பிராமணனைத் தண்டிக்க மட்டும் அதிக அதிகாரம் கொடுக்கப்படவில்லை. பிராமணனுக்குத் தரும் தண்டனை கடுமைக் குறைவாகவே இருக்கும். இதைப் பார்க்கும் போது கூட்டத்துக்கு முன் சமத்துவம் இல்லை என்பது போலவும் சலுகையே தரக் கூடாத ஒரு விஷயத்தில் சலுகை தந்து, அநியாயம் செய்திருப்பது போலவும் தோன்றலாம். அப்படித் தோன்றினால் அது நியாயந்தான்.

ஆனாலும் இதன் காரணத்தைப் புரிந்து கொண்டால் இதிலே 'அநியாயம் இல்லை; பட்சபாதம் இல்லை' - என்று தெரியும். குற்றவாளி (பிராமணனுக்கு)க்கு ராஜ தண்டனையே பிராயசித்த கர்மா ஆகிறது என்றேன். - பிராமணன் வேத மந்திர ரட்சனையையே வாழ்க்கையாகக் கொண்டவன். - ஒரு நாள் கூட அவ்வனை விட்டு இந்த வாழ்க்கை ஆசாரம் போகக் கூடாது. - அப்படி போனால் அது தேச சேமத்துக்கே கெடுதல்' - ஜெயிலில் போட்டால் பிராமணன் எப்படித் தன் ஆக்காரங்களுக்குப் பங்கமில்லாமல் மந்திர ரக்ஷனை செய்ய முடியும்.

**– தெய்வத்தின் குரல் மூன்றாம் பகுதி – 870.**

❑ "கருநாடகத்தில் ஸ்ரீ பேஜாவார் சுவாமிகள் நெருக்கடி நிலை வந்த முதல் வாரத்திலேயே ரூபாய் 1001 - கொடுத்ததுடன், செல்லும் இடமெல்லாம் ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரம் செய்து வந்தார்.

காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆர்.எஸ்.எஸ். (அன்றைய தலை மறைவு) இயக்கத்திற்கு பல விதங்களில் உதவியுள்ளார்.


ஆர்.எஸ்.எஸ். (அன்றைய தலைமறைவு) இயக்கத்தவர்கள் அவரை அடிக்கடி சந்தித்து வந்துள்ளனர்."

**இந்து முன்னணி - இராம கோபாலன் 'நெருக்கடி நிலைமையை எதிர்த்துப் போராட்டம்' - நூலிலிருந்து**



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் தமிழகம் 10

தொடர்புக்கு: அஞ்சல் பெட்டி எண் — 2929
சென்னை—600 004.

# 'பிளேக்'கும் பிள்ளையாரும்

உழைக்கும் மக்களை இரு பெரும் நோய்கள் ஆட்டுவிக்கின்றன. ஒன்று பிளேக், மற்றொன்று பிள்ளையார். ஒன்று வல்லரசின் உருவாக்கம், மற்றது பார்ப்பனீயத்தின் உருவாக்கம்.

அதில் 'பிளேக்'கைப் பொறுத்த வரையில் - அது ஒரு கொடுமையான ஆட்கொல்லி நோய். கடந்த சில நூற்றாண்டுகளாகவே-வல்லரசுகளின் எதிர்ப்பு எங்கெங்கு அதிகமாகிறதோ அங்கெல்லாம் அது பரப்பப்படுகிறது.

வல்லரசுகள் சுரண்டிக் கொழுப்பதற்கு அடிப்படையாக உள்ள சிறு நாடுகளிடமிருந்து எந்த வகை எதிர்ப்பும் வராமல் இருப்பதற்கு இதையும் ஒரு வழியாகவே வல்லரசுகள் கையாளுகின்றன.

இசுலாமிய நாடுகளின் மீது அமெரிக்காவும், அன்றைய சீனாவின் மீது ஜப்பானும், இங்கிலாந்தின் மீது ஜெர்மனியும், இந்தியாவின் மீது இங்கிலாந்தும் பலமுறை இந் நோய்க்கிருமிகளை பரவவிட்டன. இதனால் இலட்சக்கணக்கான அடித்தட்டு மக்கள் அழிந்து போயினர்.

வேறு வழியில்லாமல் இந்த நாடுகள் வல்லரசையே இந்நோய் நீக்கத்திற்கான மருந்துக்கு எதிர்பார்த்தன. இதன் வழி வல்லரசைச் சார்ந்து போகாமல் வாழ முடியாது என மன அளவில் ஓர் அடிமைத் தனத்தை வல்லரசுகள் வளர்த்துவிட்டன.

மேலும்-மிகுந்த பக்க விளைவுகள் செய்யக்கூடிய 'டெட்ராஸைசக்ளின்' ஸ்டெப்டோமைசின்'-போன்ற மருந்துகளை இந்த பிளேக்குக்கு மாற்றாக அறிமுகப் படுத்தின. அவற்றை அறிமுகப் படுத்திய வகையிலும் மீண்டும் வல்லரசுகள் கொள்ளையடித்துக் கொழுத்துத் திரிகின்றன.

இன்றைக்கு கூட்டாய்க் கொள்ளையடிக்கக் கிளம்பியுள்ள வல்லரசுகளின் 'காட்', 'டங்கல்' ஒப்பந்தங்களுக்கு இந்திய அளவில் கிளம்பியுள்ள கடும் எதிர்ப்பைத் தடுக்கவும், அதன் வழி வல்லரசுகள் எளிதாய்ச் சுரண்டிக் கொழுக்கவுமான எண்ணத்தின் விளைவே இனறைக்குப் பரப்பப்பட்ட 'பிளேக்' நோய்க்கான காரணம்.

இதன் வழியாகவும் ஓர் அரசியல் ஆதாயம் தேடுகிற முயற்சியிலேயேஅது குஜராத்தின்-சூரத் பகுதியில் முதலில் பரப்பப்பட்டுள்ளது.

குஜராத்தைப் பொருத்த அளவு பாரதீய ஜனதாவின் ஆட்சி அங்கு இருப்பதால்-அங்கு இப்படியாக நடத்தப்படுவதன்வழி பாக்கிஸ்தான் மீது பழியைத் திருப்பி - முசுலீம் எதிர்ப்பை வளர்த்து பார்ப்பனியத்தைக் கொழுக்க வைக்கிற முயற்சி எளிமையாகி விடுகிறது.

வல்லரசுக்கு எந்த வகையிலும் துணை நிற்பதிலும் அதன் வழி பார்ப்பனீயத்தை வளர்த்துக் கொள் வதிலும் பார்ப்பனர்களும் அவர்களின் அமைப்புகளும் தயங்குவதே இல்லை.

அந்த வகையில் இன்றைக்கு 'பிளேக்'கையும் அரசியலாக்குகிற முயற்சியில் பாகிஸ்தான் மீது பழிபோட்டு-முசுலிம் எதிர்ப்பைத் தூண்டி பார்ப் பனீயத்தை வளர்க்க முனைகின்றனர்.

அன்றைக்கு இங்கிலாந்து வல்லரசால் 'பிளேக்' பரப்பப்பட்டு எலிகள் கொல்லப்பட்டபோது-பூணுலை உருவிக் கொண்டு கோபாலகிருஷ்ண கோகலே ''எலிகள்-பிள்ளையாரின் வாகனம்; எனவே அதைக் கொல்லக்கூடாது'' என்று போராடியதன் வழி அவர்கள் யார் என்பதைக் காட்டினர்.

பிள்ளையார்-என்கிற பார்ப்பனீயத்தின் உருவத்தைத் தூக்கிக்கொண்டு-இன்றைக்குப் பார்ப்பனீயம் இன்னொரு நோயாய் வளர்க்கப்படுகிறது.

நகரங்கள், சிற்றூர் என்று எல்லா இடங்களிலும் பூணூல் பிள்ளையார் 'விசர்ஜன' ஊர்வலங்கள் நடத்தப்படுகின்றன.

'முசுலீம்களை நாடு கடத்துவோம்' என்றும். மசூதிகளையும்-கிருத்துவஆலயங்களையும் இடிப்போம் என்றும் கொக்கரிக்கின்றன.

பார்ப்பன(இந்து) மதத்தின் சாதியக் கொடுமை தாங்காமல் மதம் மாறிய தமிழக ஒடுக்கப்பட்ட மக்களையே இந்த மதவெறியர்கள் நாடு கடத்துவோம் என்கின்றனர்.

ஆக - சொந்த மக்களையே, உழைக்கும் மக்களையே தங்களுக்குள் எதிரிகளாக்குகிற பார்பனீய வெறித்தனமும் நச்சாய்ப் பரப்பப்பட்டு வருகிறது.

பார்ப்பன மதத்தின் கழிசடைப் புராணத்தில் பிள்ளையாரின் வாகனமாக எலி உருவாக்கப்பட்டது போல் - இன்றைக்கு பார்ப்னீயம் வளர்க்கும் பிள்ளையாரைத் தாங்குகிற 'எலி' வல்லரசின் 'பிளேக்'காக உள்ளது.

இரண்டும் இன்றைக்குப் பெரும் நோய்களாய்த் தமிழக மக்களைக் கொல்லுகின்றன; கொல்ல வருகின்றன.

ஒன்றை ஒன்று சார்ந்த, ஒன்றை ஒன்று தாங்குகிற-இந்த இரு நோய்களும் தன்மை அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் நோக்க அடிப்படையில் ஒன்று போன்றதே.

அப்போதைக்கப்போது இந் நோய்களின் கடுமையை நீக்க மருத்துவமாய்ச் சில வழிகள் பின்பற்றப்பட்டாலும், பார்ப்பனீயத்தையும், வல்லரசியத்தையும் எதிர்க்காமல், அவற்றை அழித்தொழிக்காமல்-ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை பெறாமல்-இத்தகைய கொடிய நோயகள் வேரறுபட போவதில்லை.

எனவே-ஆதிக்க வெறித்தனத்தோடு நஞ்சாய்ப் பரவிவரும் இவ்விரு பெரும் நோய்களையும் வெட்டி வீழ்த்துவோம்-விடுதலை பெறுவோம். ●

படிப்பகம்

www.padippakam.com

# உப்பு விற்காதே!

— காத்தான்

முத்துக் குளிப்பதில் மட்டுமல்ல உப்பைக் குவிப்பதிலும் புகழ்பெற்றது 'முத்து நகர்' எனச் சிறப்பாக அழைக்கப்படும் தூத்துக்குடி. அந்நிய வேட்டை நாய்களுக்குத் தலைவணங்காது கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியின் பெயரிலமைந்த மாவட்டத்தின் தலை நகரான தூத்துக்குடியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உப்பளங்கள் உள்ளன. இந்தியத் துணைக் கண்டத்தின் உப்பு உற்பத்தியில் தமிழகம் 2-ஆம் இடம் பெறுகிறதெனில் அதன் பெரும்பங்கு தூத்துக்குடியையே சாரும். தூத்துக்குடியில் எடுக்கப்படும் உப்பு பீகார், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் என வட இந்தியப் பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

முத்து நகரில் விளையும் உப்பின் பெரும்பகுதி சிறிய மற்றும் நடுத்தர உப்பளங்களாலேயே எடுக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக சிறிய உப்பளங்களே மிக அதிகம். கடந்த ஆண்டின் (1992) கணக்கின்படி, அந்த ஆண்டில் மொத்தம் எடுக்கப்பட்ட உப்பின் அளவு 20 இலட்சத்து 20 ஆயிரம் டன்கள் (ஒரு டன் என்பது ஆயிரம் கிலோ கிராம்) ஆகும். இதில் 13 இலட்சத்து 70 ஆயிரம் டன் உப்பை விளைவித்தவை சிறிய மற்றும் நடுத்தர உப்பளங்களே. ஆனால் மொத்தமுள்ள பெரிய 35 உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட உப்பின் அளவு வெறும் 6 இலட்சத்து 5 ஆயிரம் டன்கள் மட்டுமே.


சில மாதங்களுக்கு முன்பு இந்திய அரசால் புதிதாக ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி இனிமேல் தயாரிக்கப்படும் உப்பில் 'அயோடின்' கலக்கப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளது.* இதில் தான் சிக்கலே இருக்கிறது.

நீங்கள் நிச்சயமாகப் பார்த்திருப்பீர்கள். சிலருக்கு கழுத்தின் முன் பகுதி பெரிதாக வீங்கியிருப்பதை (தைராய்டு கட்டி). இது 'தைராய்டு' என்ற சுரப்பி சரியாக இயங்காததால்தான் உருவாகிறது. இந்தத் தைராய்டு சுரப்பியைச் சரிவரச் செயல்பட வைக்க வேண்டுமெனில் அதற்கு 'அயோடின்' தேவை. அடிப்படையாக, அயோடின் பற்றாக் குறையினாலேயே இந்நோய் உருவாகிறது. அப்படியானால் அயோடினைக் கலக்கச் செய்வது; கட்டாயப்படுத்துவது சரிதானே என நீங்கள் வினவலாம்.

பொதுவாக மலைப்பகுதிகளில் மட்டுமே அயோடின் சத்து உரிய அளவு கிடைப்பதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் நீலமலை மற்றும் திருச்சி போன்ற சில பகுதிகளில் மட்டுமே இந்நிலை காணப்படுகிறது என தைராய்டு மருத்துவர் கழகம் தெரிவித்துள்ளது.

ஆக, இதற்குத் தீர்வு எனில், எந்தெந்தப் பகுதிகளில் அயோடின் பற்றாக்குறை உள்ளது என்பதைக் கண்டறிந்து அங்கு மக்களுக்கு வழங்குவது அல்லது அயோடின் கலக்கப்பட்ட உப்பு என விளம்பரப்படுத்தி விற்பனை செய்வது. இதனால் யாருக்கு அயோடின் சத்து தேவையோ அவர்கள் இந்த உப்பைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

அய்யய்யோ 'இந்திய' அரசு மக்கள் நலனைப் பேண வெளியிட்ட ஆணையிலும் குற்றம் கண்டு



பிடிப்பதா? யாருக்குமே தைராய்டு கட்டி வரக்கூடாது என்பது தானே அரசின் விருப்பம் என அங்கலாய்க்கிறீர்களா? சற்று பொறுங்கள். இந்த இந்திய, பிற மாநில அரசுகள் 'குடி'மக்கள் நலனுக்காகத்தான் கவலைப்படுகின்றனவே தவிர பொது மக்களுக்காக அல்ல என்பதை நீங்கள் இந்தக் கணத்தில் மறந்துவிட்டீர்களா? மக்கள் நலனல்ல இந்த ஆணையின் பின்னணி. வேறென்ன?

இந்தியத் துணைக்கண்டத்தின் உப்பு உற்பத்தியில் தமிழ்நாடு 2-ஆம் இடம் வகிக்கிறது என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். அதோடு, தமிழக உப்பு உற்பத்தியில் பெரும் பகுதி சிறிய, நடுத்தர நிறுவனங்களால் என்பதையும்.

அயோடினை உப்பில் கலக்க 'யுனெஸ்கோ' - வால் வடிவமைக்கப்பட்டிருக்கும் மாதிரி எந்திரத்தின் விலை உரூ. 6 லட்சம். இது எந்தவொரு சிறிய, நடுத்தர நிறுவனங்களாலும் முதலீடு செய்ய இயலாத தொகையாகும். மாதிரிக்கே இந்த விலை என்றால் அது தமிழகம் வருகையில்...?

ஆக, இந்த ஆணையின் மெய் முகமானது மக்கள் மீதான பாசம் என்பதை விட உப்பு உற்பத்தியிலும் நுழைந்திருக்கும் 'டாடா' போன்ற ஏழை(!) இந்தியர்களின் நிறுவனங்களை நிலைக்க வைப்பதும் மிக அதிகஅளவு உப்பு உற்பத்தி செய்யும் சிறிய, நடுத்தர நிறுவனங்களை மூட வைப்பதும், உப்பின் விலையை அதிகரிப்பதும் இவற்றின் வழியாக உப்பு உற்பத்தியிலும் கூட தமிழ்நாட்டை அடி பாதாளத்தில் வீழ்த்துவதுமாகும். இவ்வாறாக தமிழ்நாட்டை இந்தியர்களின் வேட்டைக்காடாக்குவதே இந்திய அரசாணையின் நோக்கம் ஆகும். ●

✽ அதன்படி அக்-2ம் நாளிலிருந்து அயோடின் கலக்காத உப்பை விற்கக்கூடாது என்கிறது அரசு.



படிப்பகம்

www.padippakam.com

# "கருப்புக் கொடிக்குள் காவியாய் மாறிக் கொண்டிருக்கும் சிவப்பு வட்டம்"

அன்புத் தோழனுக்கு...

நடந்து கொண்டிருக்கிற அரசியல் அயோக்கியத் தனங்களைக் கண்டு கொதிப்புற்று நீ எனக்கு எழுதியிருந்த மடல் கிடைத்தது.

திராவிடர் கழகம் - தொடங்கப் பெற்று ஐம்பதாண்டுகள் ஆகி, அது நடத்துகிற பொன்விழா நிகழ்வுகளுக்கு இடையில் அது போய்க் கொண் டிருக்கிற பாதையைக் குறிப்பிட்டு வருந்தியிருந்தாய்.

கூடவே, கடந்த 16.9.94 அன்றைய 'விடுதலை' நாளிதழின் ஆசிரியவுரையின் வாசகங்களைக் குறிப்பிட்டு நீ கேள்வி கேட்டு எழுதியிருந்ததற்குத் தான் விடையாக இம்மடலை உனக்கு நான் எழுதுகிறேன்.

விடுதலையின் ஆசிரியவுரையில் -

"தந்தை பெரியாருக்குப் பிறகு - அவரது இயக்கம் வளர்ந்திருக்கிறதா என்று கேள்வி எழுப்புகிறவர்கள் இருக்கிறார்கள். தந்தை பெரியார் இருந்த காலத்தில் இருந்ததைவிட - இட ஒதுக்கீடு இப்போது அதிகரித்திருக்கிறதா? அல்லது குறைந்திருக்கிறதா? என்பதுதான் அப்படி கேள்வி போடுவதைப் பார்த்து நாம் எழுப்ப விரும்பும் எதிர் கேள்வி.

தந்தை பெரியார் காலத்திலேயே இல்லாத அளவுக்கு - இட ஒதுக்கீட்டுக்கு - மாநில அரசின் தனிச் சட்டமே வந்திருக்கிறது; இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன?...

தந்தை பெரியார் காலத்துக்குப் பிறகும் - அவரது கொள்கைகள் வேகமாகப் பரவிக் கொண் டிருக்கின்றன என்பதைத்தானே"

இப்படியாக எழுதப்பட்டிருப்பதாகச்சுட்டிக் காட்டியிருந்தாய்.

இந்த ஆசிரியவுரையைப் பொறுத்த அளவில் இட ஒதுக்கீட்டின் எண்ணிக்கை அளவு உயர்ந்திருப்பதாய்ச் சுட்டிக் காட்டியவர்கள் அது பயனாகும் தளம் குறைந்திருப்பதைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை என்பதன் வழி அதன் மீதான உன் முதல் கருத்து சரியானதுதான்.

அதாவது, தந்தை பெரியார் அவர்கள் 1925-க்கு முன் முன்வைத்த வகுப்பு வாரித்துவத்தின் கருத்து என்பதில் அதன் பயன்பாட்டுத் தளம் -

கல்வி மட்டம், அரசுப்பணிகள் அதாவது அனைத்து கல்வி நிறுவனங்களிலும், அனைத்து அரசு நிறுவனங்களிலும் என்கிற அளவில் இருந்தது.

இன்றைக்கு - பல்வேறு அரசு நிறுவனங்கள் தனியார் மயமாகிவிட்டன. அரசும் பல நிறு வனங்களைத் தன் பொறுப்பில் இல்லாமல் தனி நிறுவனங்களிடம் கையளித்து வருகின்றது.

எனவே, அன்றைக்கு பெரியார் காலத்தில் அரசின் பணி இடங்கள் நூறு எனில் அதில் இட ஒதுக்கீடு என்பது விழுக்காட்டு அடிப்படையில் இன்றைய ஒதுக்கீட்டு விழுக்காட்டை ஒப்பிடுகிறபோது குறைவானதாய் இருக்கலாம்.

ஆனால் இன்றைய அரசின் பணி இடங்களோ ஐம்பது கூட இல்லை என்கிற சூழலில் 69-விழுக்காடாக உயர்த்தப்பட்டுவிட்டது இட ஒதுக்கீட்டின் எண்ணிக்கை எனத் தம்பட்டம் அடித்துக் கொள்வது - யாரை ஏமாற்ற என்பது உன்னைப் போல் எனக்கும் புரியவில்லை.

இதில் எந்த அளவு பெரியார் செய்த செயலைவிட இவர்கள் அதிகமாகச் செய்துவிட்டார்கள் என்பது புரியவில்லை.

மேலும் பெரியார் கொள்கை என்பது இடஒதுக்கீடு என்பது மட்டுமல்ல என்று உன் மடலில் குறிப்பிட்டுள்ள இரண்டாவது கருத்தும் சரியானதே.

அதைப் படித்த போது எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது.

அதாவது தந்தை பெரியார் அவர்களே தன் கொள்கை எது என்பதை விளக்கிப் பேசியுள்ளார்கள்.

அதன்படி:

"திராவிடர் கழகம் என்னுடைய தலைமைக்கு வந்தபிறகு நான் துணிவாகவே மூன்று கொள்கை களைச் சொல்லிக் கொண்டு வந்து இருக்கிறேன்.

முதலாவதான கொள்கை, இந்த நாட்டிலே இருக்கிற மனித சமுதாயத்திலே உள்ள உயர்வு தாழ்வு; அதற்கு ஆதாரமான வருணாசிரம தர்மம்; அதை ஆதரிக்கின்ற மதம், சாஸ்திரம், புராணங்கள்; இவைகளினாலே கற்பிக்கப்பட்ட கடவுள்கள் ஆகியவை ஒழிய வேண்டும் என்பது முதல் கொள்கையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாவது கொள்கை, எங்களுடைய நாடு விடுதலை அடைய வேண்டும் என்பது தான். நாம் யாவருமே - காங்கிரசுகாரர்கள் உட்பட, முன்பு, நம்முடைய மாநிலம் சுயாட்சி பெற்றிருந்தால் போதும், வெள்ளைக் காரர்களுடைய ஆட்சியைப் பற்றிக் கவலை என்று நினைத்தவர்கள். பிறகு வெள்ளைக் காரர்கள் போவதாய் இருந்தாலும் சரி; போகாமல் இருந்தாலும் சரி; நாம் நமக்கு மாநில சுதந்திரம் வேண்டும் என்கிறோம். விடுதலை பெற வேண்டும் என்று சொன்னோம். இப்பொழுது வெள்ளைக் காரன் போய்விட்டான்; ஆனாலும் நாம் இன்னும் அடிமைகளாக இருக்கிறோம். நம்முடைய மாகாணத்திற்கு - இராச்சியத்திற்கு சுய ஆட்சி இல்லை. ஆதலால் நம் மாநிலம் விடுதலை பெற்றாக வேண்டும்.

மூன்றாவதாக, இந்த இரண்டு காரியமும் ஆகிற வரையிலே நம்முடைய சமுதாயத்திலே வருணாசிரம முறைப்படி வகுத்துள்ள மக்கள் (பார்ப்பனர், சூத்திரர், பஞ்சமர்) விகிதப்படி வகுப்பு உரிமை தரப்பட வேண்டும்–

நமக்கு வேண்டியதெல்லாம் இந்த மூன்று கொள்கை வெற்றியடைய வேண்டுமென்பதேயாம்.''

- என்று 1.3. 1951-ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களின் கருத்து 'விடுதலை'யில் வந்ததே நினைவுக்கு வந்தது.

அதன்படி பார்க்கிறபோது பெரியார் காலத்திற்குப் பிறகும் அவருடைய கொள்கைகள் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றன - என்று இப்போது விடுதலையில் எழுதுவது எந்த அளவில் பொய்யானது என்பது விளங்கும்.

தோழனே–

நீ குறிப்பிட்டிருந்தது போல பூனை தன் கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருண்டு விட்டதாய் எண்ணிக் கொள்கிற தன்மையிலேயே தற்போதைய திராவிடர் கழகம் உள்ளது.

இவர்கள் - அன்றைய காலத்தைவிட இன்றைக்கு பெரியார் கொள்கை வளர்ந்திருக்கிறது என்றால் எந்த வகையில் என்பது நமக்குப் புரியவில்லை.

☞ அன்றைக்குப் பெரியார் காலத்தில் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி போன்ற இந்து வெறி அமைப்புகள் இந்த அளவில் வளரவில்லை. இன் றைக்குக் கடுமையாக வளர்ந்திருக்கின்றன.

☞ அன்றைக்கு பிள்ளையார் ஊர்வலங்கள் இந்த அளவில் 'விசர்ஜன'மாக நடத்தப்பட வில்லை, இன்றைக்கு நடத்தப்படுகின்றன.

☞ அன்றைக்கு தமிழ்நாடு நீங்கலாக இந்தியப்பட எரிப்பு என்ற பெரியாரால் போராட்டம் அறிவிக்கப்பட்டது - இன்றைக்கு அரங்குக்குள் கூட அது பேசப்படவில்லை.

☞ அன்றைக்கு இந்தியக் கொடி எரிப்புப் போராட்டம் ஆர்ப்பரிக்கப்பட்டது - இன்றைக்கு அடங்கிப் போய்விட்டது.

☞ அன்றைய விடுதலையில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்று தலைப்பிலேயே போடப்பட்டு வந்தது. இன்றைக்கு தூக்கி எறியப்பட்டுள்ளது.

☞ அன்றைய சென்னை - விடுதலை அலுவலகத்தின் பெயர்ப்பலகையில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என இருந்தது. இன்றைக்குத் திராவிடக் கழகம் தனக்குத் தானே தார்பூசி அழித்துக் கொண்டது.

☞ அன்றைக்கு "தமிழ்நாடு தமிழருக்கே!" என்று பச்சைக் குத்திக் கொள்ளுங்கள் என்று பெரியார் கூறிய கூற்றுகள் இன்றைக்குப் பச்சைத் தண்ணீரில் கூட எழுதிப்பார்க்கக் கூடாது என்று கூறப்படுகிறது.

☞ அன்றைக்குத் 'தமிழ்நாடு தமிழருக்கே!' - என பேட்ஜ் அணிந்து கொள்ளுங்கள் என்று அறிவித்து உருவாக்கப்பட்ட பேட்ஜ்கள் இன்றைக்குக் கடலில்(!) கொட்டப்பட்டுவிட்டன.

☞ அன்றைக்கு வட நாட்டான் கடை மறியல் என்று தந்தை பெரியார் அறிவித்த போராட்டங்கள் இன்றைக்கு வடநாட்டான்களுக்கே பெரியார் திடல் வீடுகளை வாடகைக்கு விடுவதில் வந்து நிற்கிறது.

☞ அன்றைக்கு - கருவறை நுழைவுப் போராட்டம் எனத் தந்தைப் பெரியார் அறிவித்த போராட்டங்கள் - இன்றைக்குப் பிற அமைப்பு செய்கிறபோது அது வன்முறை போராட்டம் என விமர்சிக்கப்படுகிறது.

☞ அன்றைக்கு 1965-இல் தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தன் நெருங்கிய நண்பர் இராஜாஜி பார்ப்பனர் வரவேற்கிறார் என்பதற்காகவே எதிர்த்த பெரியாரின் ஈரோட்டுப் பாதை இன்றைக்குத் தடம்மாறி பாரதிய சனதா (என்கிற பார்ப்பனிய சனதா)வுடன் கூட்டு சேர்ந்து கொண்டு மேடையில் பாப்பாத்தி ஜெயலலிதாவைப் (ஜெயலலிதாவே பெருமைப்பட்டுச் சொல்லிக் கொண்ட வகையில் பாப்பாத்தி ஜெயலலிதாவைப்) பாராட்டுகிறது.

- இப்படி அடுக்கிக் கொண்டே போகிற அளவில் திராவிடர் கழகம் வளர்ந்திருக்கிறதா? அல்லது குறைந்திருக்கிறதா? - என்பது எல்லாருக்கும் தெரியும்.

பெரியாரின் கொள்கையை இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பதாகமட்டும் சுருக்கிக்காட்டித் தங்களின் கையாலாகத் தனத்திற்குப் பாதை அமைத்துக் கொள்கிறது தி.க. தலைமை.

அவருடைய கொள்கையில் கூட பெரியார் அவர்கள் குறிப்பிடுகிறபோது - முதல் இரண்டு கொள்கையும் நிறைவேறுகிற வரையில் நம்முடைய சமுதாயத்தில் வருணாச்சிரம முறைப்படி வகுத்துள்ள வகுப்பு மக்களுக்கு வகுப்புரிமை தரப்படவேண்டும் - என்று குறிப்பிடுகிறதே தவிர - முதல் இரண்டு கருத்துகளுக்குமான போராட்டத்தை ஒதுக்கிவிட வேண்டும் என்று குறிப்பிடவே இல்லையல்லவா!

அந்த காலங்களில் கூட, வகுப்பு வாரித்துவத்துக்காகப் பெரியார் அவர்கள் போராடிய அதே காலங்களில் மற்ற போராட்டங்களையும் செய்து கொண்டிருந்ததை நீ முன்பே அறிவாய் என்று எண்ணுகிறேன்.

தோழனே - உனக்குத் தெரியுமா?

நேற்றைக்கு வரை - ஜெயலலிதா சங்கராச்சாரியை



படிப்பகம்

www.padippakam.com

இதுவரை சென்று பார்த்ததில்லை, பார்த்ததில்லை என்று வறட்டுக் கத்து கத்திக் கொண்டிருந்த நம் பகுத்தறிவுகளுக்கு ஒரு 'பூணூல்' அடி கொடுத்துள்ளார். ஜெயலலிதா.

சங்கராச்சாரியைப் போய் 'தரிசித்து'விட்டு வந்தார் அந்த வீர( மணி)ராங்கனை!

அப்போதுகூட - விடுதலை'யில் என்ன எழுதினார்கள் என்று நீ படித்திருப்பாய் என எண்ணுகிறேன்.

விடுதலை ஞாயிறுமலர் (11.9.94இல் வெளியானதில்) ஆசிரியர் விடையளித்தார் ஒரு கேள்விக்கு

அக்கேள்வி - விடையில்:

"முதல்வர் ஜெயலலிதா நீண்ட இடைவெளிக்குப் பிறகு காஞ்சி சங்கர மடத்திற்குச் சென்றதற்கு முக்கியத்துவம் உண்டா?"

என்பது கேள்வி,

அதற்கு -

"மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து முயன்று காஞ்சிமடம் இதில் "வெற்றி" பெற்றுள்ளது போலும்!"

இது ஆசிரியர் (வீரமணி) விடை.

எப்படி பார்த்தாயா?

இங்கு கூட ஜெயலலிதாவின் இந்த மூன்று ஆண்டுக் காஞ்சி சென்று சந்திக்காத கட்டுப்பாட்டை ஆசிரியர் மெச்சுகிறார்.

அதில்கூட சங்கரமடத்துக்கு வெற்றியாம்!

ஜெயலலிதாவுக்கு என்ன என்பது விளக்கமளிக்கப் படவில்லை.

சங்கராச்சாரியை நேரில் போய்ப் பார்த்துதான் ஜெயலலிதா பார்ப்பனியத்தைக் காக்க வேண்டும் என்பது இல்லை.

ஜெயலலிதாவின் தொண்டரடி பொடிகளாகப் பல அமைச்சர்கள் சங்கராச்சாரியிடம் "சாஷ்டாங்கமாக" விழுந்து செய்திகளைப் பெற்று வந்து ஜெயலலிதாவிடம் கொடுத்த செய்தியையெல்லாம் திராவிடர் கழகம் மறைத்து விடுவது ஏன் என்று புரியவில்லை.

ஈரோட்டுக் கண்ணாடி, ஈரோட்டுக் கண்ணாடி என்பவர்கள் எங்கே - அதைத் தொலைத்துவிட்டார்களா எனத் தெரியவில்லை.

இந்த மடலில் இறுதியாக ஒன்றை மட்டும் குறிப்பிடவிரும்புகிறேன்.

ஒவ்வொருவரின் நூற்றாண்டிலும் அந்த அந்த சிறப்பாளர்களின் படைப்புகளையும் அரசுடைமை யாக்க வேண்டும். அதாவது மக்களுடைமையாக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம் - அப்படியும் ஏறத்தாழ ஆக்கப்படுகிறது.

புரட்சிப்பாவலர் படைப்புகள் முழுமையாய் மக்களுடைமையானது.

அண்ணாவின் படைப்புகள்கூட நூற்றாண்டுக்கு முன்பாகவே மக்களுடைமையாக்கப்பட்டுவிட்டன.

அதுபோல் - பெரியாரின் படைப்புகளும், கருத்துகளும் மக்களுடைமையாக்கப்படவேண்டும் என்று நாம் பல முறை பேசியிருக்கிறோம்.

பெரியார் அவர்கள் - திடலுக்கும், சிலருக்கும் மட்டும் சொந்தமானவர் இல்லை அல்லவா.

அவர் இத் தமிழ்ப்பெருமக்களுக்குச் சொந்த மானவர். அவர் படைப்புகள், உடைமைகள் சொந்தமானவை.

வேண்டுமானால் -

பாரதிய சனதாவுடன் கூட்டு வைத்து ஜெய லலிதாவைப் பாராட்டுகிற நிலையில் - பெரியாரின் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்த பாப்பாத்தி ஜெயலலிதாவைத் தாங்கிப்பிடிக்கிற வகையில் கருப்புக்குள் காவியாய் மாறி வருகிற சிவப்பு வட்டம் கொண்ட கொடியும், திராவிடர் கழகமும் - சிலருக்குச் சொத்தாகக் கூட இருந்துவிட்டுப் போகட்டும்.

நாம்

நம் - பெரியாரை, அவரின் எழுத்தைப்
பொதுமைப்படுத்த வேண்டும்.
அதற்குக் குரல் எழுப்பிட வேண்டும்.

அவ்வகையில் நீயும் உன்னளவில் உள்ள தோழர்கள் அனைவருக்கும் பறையறைந்து முழங்குவாய் என எதிர்பார்க்கிறேன். பிறபின்.

தோழமையுடன்

வேட்பன்

## சங்கரமட இடிப்புப் போராட்டம்

## பிரச்சாரத்தையே தாங்காத பார்ப்பனர்கள்!

தமிழகம் முழுக்க சங்கரமட இடிப்புப் போராட்டத்திற்கான பிரச்சாரங்களை த.ஒ.வி.இ. தோழர்கள் பரவலாக செய்து வருகின்றனர்.

குமரி மாவட்டத்தில் எழுதப்பட்ட சுவரெழுத்து களை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் இரவோடு இரவாக பல இடங்களின் அழித்துள்ளனர்.

சில இடங்களில் - **'சங்கரமட இடிப்புப் போராட்டம்'** என்பதில் **'சங்கரமடம்'** - என்பதை அழித்துவிட்டு, **'பெரியார் அம்பேத்கர் சிலைகளை'** என்று எழுதியுள்ளன, பார்ப்பனக் குடுமிகள்.

தம் ஆதிக்கக் கூடங்களின் ஆணவத்தைக் கண்டித்து நாம் செய்யும் பிரச்சாரங்களையே தாங்கிக் கொள்ள முடிவில்லை அந்த பூணூல்களுக்கு.

நாம் மட்டும் அடிமைகளாகவே, தீண்டப்படாத மக்களாகவே, வாழ வழியற்றவர்களாக அல்லல்பட வேண்டுமா என்ன?



படிப்பகம்

www.padippakam.com



## இரண்டாவது சுதந்திரப் போர்

# கீரியும் - பாம்பும்

டங்கல், புதிய பொருளாதாரக் கொள்கை, காட் ஒப்பந்தம் இவற்றைஎதிர்த்து இரண்டாவது சுதந்திரப் போர், சட்ட மறுப்பு இயக்கம், பாரத் பந்த் என்றெல்லாம் சொல்கிறார்களே என்ன வென்று அறிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு சி.பி.எம். கட்சியினரிடம் நேருரை கேட்க நினைத்தோம். நேருரைக்காக சி.பி.எம். கட்சியினரைச் சந்தித்தபோது நேரம் தான் வீணானதே தவிர நேருரை கிடைக்கவில்லை. மேலிடம் தான் கருத்துச் சொல்ல முடியும் என்று தட்டிக் கழித்தார்கள்.

வருத்தம் மேலிட நாம் மின்சாரத் தொடர் வண்டியில் வந்தபோது
நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம். –
இது நமக்கேயுரிமையா மென்பதறிந்தோம் –
இந்த பூமியிலெவர்க்கு மினி அடிமை செய்யோம்–
பரி பூரணனுக்கேயடிமை செய்து வாழ்வோம்.

– என்ற பாரதியின் பாடலைப் பாடியபடி பிச்சை கேட்டு வந்தார் ஒரு பெரியவர். காங்கிரசில் பிறந்து சி.பி.எம் கட்சியில் செத்துப் போன பி.ராமமூர்த்தி போலவே அந்தப் பெரியவருக்கும் ஒருகால் ஊனம். சரி இவரோடு இரண்டாவது சுதந்திரப்போர் பற்றி உரையாடலாம் என்று அவர் அருகில் சென்ற போதுதான் தெரிந்தது. சி.பி.எம். ஊழியர்களைப்போல் அவரும் குருடு என்பது. ஒரே ஒரு வேறுபாடு அவருக்கு கண் குருடு! சி.பி.எம். ஊழியர்களுக்கோ கருத்துக்குருடு.

நுங்கம்பாக்கம் நிறுத்தம் வந்ததும் அவரோடு நாமும் இறங்கி, அவரிடம் பேச்சு கொடுத்தோம்.

**நாம் :** ஐயா இங்கே பிச்சை எடுப்பவர்களெல்லாம் சினிமாப் பாடல்களையும், கடவுள் பாடல்களையும் பாடித்தான் பிச்சை எடுப்பார்கள். நீங்கள் மட்டும் பாரதி பாடலைப் பாடிப் பிச்சை எடுக்கிறீர்களே. வாருங்கள் தேநீர் குடிக்கலாம்.

**பெரி :** நல்லது தம்பி–

தம்பி! எனக்கு வயசு அறுபத்தெட்டாச்சு, பார்வையும் போச்சு, சொந்த ஊரு மதுர, கல்யாணமும் பண்ணிக்கல...

**நாம் :** ஏன்

**பெரி :** எனக்கு இருபது வயசு இருக்கும்போது வெள்ளக்காரன எதுத்து கப்பல்படை போராட்டம் நடந்துச்சு. அதுக்கு ஆதரவா நாங்க ஊர்வலம் போனப்ப போலீஸ்காரன் கால ஒடிச்சிட்டா(ன்) நொண்டியா இருக்கிறப்ப எதுக்கு கல்யாணம்னு விட்டுட் டேன். அப்ப பாரதியார் பாட்டெல்லாம் நல்லா படிப்பே(ன்). அதத்தா(ன்) இப்ப படிச்சு பிச்சை எடுக்கிறேன்.

**நாம் :** அய்யா! இப்ப சி.பி.எம் போன்ற கட்சிகளெல்லாம் அமெரிக்கா போன்ற வெளிநாடுகள் கொள்ளையடிக்க அனுமதித்த காங்கிரசு அரசை எதிர்த்து இரண்டாவது சுதந்திரப் போர், சட்ட மறுப்பு இயக்கம் என்று போராடுவது தெரியுமா!

**பெரி :** கேள்விப்பட்டே(ன்) தம்பி! காங்கிரச எந்தக் காலத்துல தம்பி இவனுக உண்மையா எதுத்தானுங்க! காந்தி கம்யூனிஸ்டு கட்சிக்கு வெளி நாட்டுல இருந்து பணம் வருதுன்னு சொன்னதுமே கட்சிக் கணக்கத் தூக்கிக்கிட்டு காந்தி வீட்டுக்கு நடையா நடந்தாரு "சோசி"ன்னு ஒரு கம்யூனிஸ்டு கட்சி பொதுச் செயலாளரு.

இரண்டாவது சுதந்திரப்போரா?... வெள்ளையனே வெளியேறுன்னு கத்துனோம். ஆனா நேரு ஆட்சிக்கு வந்ததும் என்ன சொன்னாரு வெளிநாட்டுக் கம்பெனிக்கு எந்தத் தடையுமில்ல அப்பிடின்னாரு. அந்தக் காலத்துல 'சுதந்திரச் சங்கு'ன்னு ஒரு பத்திரிக்க வந்துச்சு. அதுல காந்தி சுயராச்சிய வரவு-செலவு நாம பாத்துக்கிடனும் அவ்வளவுதா(ன்) அப்பிடின்னு எழுதுனாரு.

**நாம் :** அப்படின்னா? 1947ல் பெற்றது சுதந்திர மில்லையா? இந்த பூமியிலெவர்க்குமினி அடிமை செய்யோம் - பரி பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம் - என்று நீங்கள் பாடியது பொய்யா?

**பெரி :** தம்பி 47க்கு முன்னால் நம்மல வெள்ளக் கார(ன்) மட்டும் தின்னா(ன்). இப்ப எல்லாநாட்டுப் பயலும் பிச்சுப் பிச்சுத் திங்கறா(ன்) பாரதியார் பாடுன பரிபூரணன் எல்லா நாட்டுக் காரனுமோ என்னமோ? 47க்கு முன்னால வெள்ளக்காரனால நம்ம மேல 700 கோடி ரூபா கடன்னு சொல்லிப் போராட்டம் நடத்துனோம். இப்ப நில(மை)ம என்ன பல ஆயிரங்கோடி கடன்.

**நாம் :** அய்யா நீங்கள் சொல்வதும் உண்மைதான். மேற்கு வங்கத்தில் ஆளுகிற சி.பி.எம். கட்சி சோதிபாசுகூட வெளிநாட்டுக் கடனுக்காகவும், தொழிலுக்காகவும் ஒவ்வொரு நாட்டுக்கும் போயிட்டு வர்றாரு. இப்படி காலம் பூராவும் நம்மள வச்சிருக்கத் தான் வெளிநாடுகள் இங்கு பிரிவினைவாதத்த அதாவது தனி நாடு கேக்குறவங்களை வளர்த்து விடுகிறது என்பது உண்மையா?

**பெரி :** தம்பி!

வங்காளத்துல சிட்காங்குனு ஒரு இடத்தில துப்பாக்கி தூக்கி வெள்ளக்காரன எதுத்துப் போராடுனாங்க! நாகலாந்துல, பஞ்சாபுல இப்பிடியெல்லாம் தனித்தனியா அமைப்பு கட்டி போராடுனப்ப, காந்தியும், காங்கிரசும் ஐயையோ பிரிவினைவாதம் வெள்ளைக்காரன் சூழ்ச்சினு அலறி பிரிவினை வாதம்னு பூச்சாண்டி காட்டுனாங்க! அப்படி அலறியும் போராட்டம் ஓயல! உடனே அப்ப இருந்த கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாடு மாதிரியிருக்கிற எல்லாத்துக் கும் சுயநிர்ணய உரிமைன்னு என்னமோ தரணும்னு காங்கிரசுக்குப்



படிப்பகம்

www.padippakam.com

புத்தி சொன்னாங்க. உடனே காங்கிரசும் சரின்னு சொல்லி நாப்பத்தி எழுல கொடி ஏத்திட்டாங்க. கொடி ஏத்துன மறுநாளே என்னோட ஒடம்புல ஒரு சொட்டு இரத்தம் இருக்கிற வரைக்கும் இந்தியாவுல இருந்து யாரும் பிரிய முடியாதுன்னுட்டாரு நேரு.

உடனே கம்யூனிஸ்டு காரனுங்களும் சுயநிர்ணய உரிமையாவது, மண்ணாங்கட்டி யாவதுன்னு தூக்கி எரிஞ்சுட்டானுங்க.

**நாம் :** நீங்க சொல்றதப் பாத்தா “கியூம்” என்கிற வெள்ளைக்காரன் ஆரம்பித்த காங்கிரசுக்கும், சி.பி.எம். போன்ற கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் வேறுபாடு இல்லை என்பது போன்ற தெரிகிறதே?

**பெரி :** ஆமாதம்பி! வெள்ளக்காரனுக்குப் பொறந்த பிள்ள காங்கிரசு, அந்தக் காங்கிரசு சோசலிஸ்டு காங்கிரசுன்னு ஒரு பிள்ளையைப் பெத்துச்சு. அந்தப் பிள்ளதான் வளந்ததுக்கு பின்னே கம்யூனிஸ்டுனு பேரு மாத்திக்கிடுச்சு.

**நாம் :** இவங்க கும்பிடுற பாரத மாதாவைப் பெற்றதே வெள்ளைக்காரன்தான். இன்றைக்கும் தமிழ்நாடு உள்ளிட்டு இந்தியாவில் இருக்கிற அரசின் வழியாக வெளிநாடுகள் கொள்ளையடிக்கின்றன. பார்ப்பனர்களும் பெரிய நிலமுடைய சாதி ஆதிக்கர்களும், பெரும் முதலாளிகளும் இவர்களின் கூட்டாளிகள். எனவே இந்தியாவை விட்டு வெளியேறு என்பதை விட இந்தியாவே வெளியேறு என்பதுதான் சரி என்று கூறுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

**பெரி :** எந்தக் காலத்துல தம்பி இந்தியா முழுக்க ஒரு கட்சி இருந்து போராட்டம் நடத்துச்சு. முப்பத்தி ஒன்னுல மதுரயில காங்கிரசுல இருந்தவங்க இண்டாயிரம் பேரு. தமிழ்நாடு முழுக்க பதினஞ்சாயிரம் பேருதான். இதுல முக்கால்வாசிப்பேரு பாப்பானும் பணக்காரனும். வடக்க இருந்து எவனாவது வந்து பேசினா நமக்குப் புரியாது. நாம போயி வடக்க பேசினா அவனுக்குப் புரியாது. ஆனா பாப்பான் போயி எங்க பேசினாலும் பாப்பானுக்குப் புரியும்.

இதுதான் தம்பி! இந்தியா. அதுனாலதான் இந்தியக் கட்சி எல்லாத்துலயும் பாப்பான் தலைவரா இருக்கா(ன்)

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுற மாதிரி வெளிநாட்டுக் காரனுக்கு விக்கிறதும் பாப்பா(ன்) விக்காதேன்னு சத்தம் போடுறதும் பாப்பான். இவனுக எல்லாத்துக்கும் ஒரே ஆத்தா! அவதா(ன்) பாரதமாதா. அவளுக்கு ரத்தம் வேணும்னா சாதிவெறியனுங்க நம்ம ரத்தத்த கொடுப்பானுங்க.

**நாம் :** இருந்தும் இப்போது டங்கல் திட்டத்தை எதிர்த்து பெரிய அளவில் போராடுகிற இயக்கம் சி.பி.எம் தானே.

**பெரி :** தம்பி, கீரிக்கும் பாம்புக்கும் சண்ட வந்தா என்னாகும்.

**நாம் :** கீரியோ, பாம்போ செத்துப்போகும்.

**பெரி :** தெருவோரத்துல கீரி பாம்பு சண்ட விட்டு சம்பாதிக்கிறவன பாத்திருக்கயா? அவ(ன்) வச்சிருக்கிற கீரியும் பாம்பும் சாகவேசாகாது. அவ(ன்) பொழப்பும் ஒழுங்கா நடக்கும். அது மாதிரித்தான் இவனுங்க பொழப்பும். எம்பொழப்பும் நடக்கனும் நா(ன்) வர்றேன்.

**(மீண்டும் பெரியவர் பாடத் தொடங்கிவிட்டார்)**

படியளப்பேன் என்று பாராள வந்தவன்
துடியெடுத்தானடி முத்தம்மா - அவன்
துடியெடுத்தும் அதைத் தாங்கிக் கொண்டதால் நம்
குடிகெடுத்தானடி முத்தம்மா.

---




இதுவரை தமிழ் எனக்குச் சோறுபோட்டது-
இனி நான் தமிழுக்குச் சோறு போடுவேன்.

**– வைரமுத்து**

தமிழுக்காக ஒரு தங்க நாற்காலி செய்கிறேன்

**– வைரமுத்து**

இன்று தமிழுக்குப் பிறந்த நாள்-

**– வைரமுத்துவின் பிறந்தநாள் விளம்பரம்**

வைரமுத்து தன் பிறந்த நாளை கவிஞர் தினமாக அறிவித்துள்ளார்.

**– வைரமுத்துவின் பிறந்த நாள்செய்தி**

*ஒரு வழியாக வைரமுத்துவுக்கு முற்றிவிட்டது. இனியும் அவரை வெளியில் உலவவிடுவது நல்லதல்ல.. உடனடியாக அவரை கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவமனையில் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதுதான் அவருக்கும், அவர்குடும்பத்தாருக்கும், தமிழுக்கும் நாட்டுக்கும் நல்லது.*

**– திருஞானம்**




படிப்பகம்

www.padippakam.com

# திருடனா தமிழன்?




## இழிவான இரண்டாம் தர மக்களாய்த் தமிழர்கள்!

பக்கத்தில் உள்ள விளம்பரம் பெங்களூரிலிருந்து வெளிவரும் "டெக்கான் ஹெரால்டு" என்கிற ஆங்கில இதழில் கடந்த 30.8.'94 அன்று வெளியானது.

'வில்மேன்' என்கிற மழிதகடு (பிளேட்) விளம்பரம் அது.

அதில் '(பிக்பாக்கட்) திருடனான பாண்டியனுக்குச் சிறந்த நண்பன்' - என்கிற வகையில் அந்த மழிதகடு விளம்பரப்படுத்தப்படுகிறது.

பொதுவாக கேரளாவில் மலையாளிகளிடமும், கருநாடகாவில் கன்னடர்களிடமும் தமிழர்களைப் 'பாண்டியன்' - என்று கூறுகிற வழக்கம் உண்டு.

திரைப்படங்களிலும், இது போன்ற விளம்பரங்களிலும் தமிழர்களைத் திருடர்களாகவும், அயோக்கியர்களாகவும் காட்டி இந்த அளவு இழிவு படுத்துகின்றனர்.

சதை திண்ணிகளான குஞ்சு மோனனையும், பிரபு தேவாவையும் பிறரையும் மெய்மறந்து பார்த்துக் கொண்டு - சூடு சுரணையில்லாமல் இங்கு நாம்_!



படிப்பகம்

www.padippakam.com

**THE BHADRAVATI TAMIL SANGAM, Bhadravati (R.)**
( SHIMOGA DIST. KARNATAKA )
(Reading Room & Library)

Ref. No. : BTS/ 60/ 19/94    Date 14-7-94.

To
The Commissioner for Linguistic Minorities in India.
40, Amarnath, Jha Marg
ALLAHABAD. 211002.

Sir,

Sub:- Protect the Linguistic Minorities ( Tamil & Telugu ) belongs to Scheduled caste in Shimoga Dist.

Bhadravati is a Industrial city consists of different languages in which Tamil & Telugu speaking citizens are concentrated as labourers in Visvesvaraya Iron & Steel Ltd, Mysore Paper Mills Ltd, agricultural labourers/Manual working peoples. These Linguistic & Minority citizens … the permanent citizens of this city since … 50 years. Among these Linguistic minorit… majority belongs to Scheduled castes. The… Linguistic Minorities cum Scheduled caste… are in the voters list/Enumeration list … ration cards. Some are still in Govt servi… Retires/Steel Industry employees etc.

As usual during this year, these citizen… submitted prescribed forms to Tahsildar to… Scheduled caste certificate stating their … sub-caste, Adi-Dravida, Adi-Andhra etc.

As a surprise the Tahsildar, Bhadravati … is authorised to issue the caste certificat… observed the followings. If the name of the candidate is in the style of Tamil name or … name or if the sub caste is Adi-Dravdia or A… Andhra, he is refusing the issue certificate … and directing the citizens to produce the mig… certificate from Tamil Nace or Andhra or to … caste certificates from Tamil Nadu/Andhra of … forefathers.

When asked for issue endorsement/remarks, … refused to issue any documents other than oral…
…e Linguistic Minorities cum … caste citizens are in hardship to admit their children in Educational institution…

Article 350B(2) of our constitution [illegible] empowered to investigate the matter and to prot… the Linguistic Minorities.

This copy of the letter is also sent to the following officers who are also authorised to de… the matter & for kind information.

1. Asst.Commissioner for Linguistic Minorities, Western Zone, 23, Fort, Belgaum-590016.
2. Dy.Secretary, DPAR(L&M), Vidhana soudha, Bangalor…
3. National Commission for SC/ST, Govt of India, Office at No.177, 22nd Cross, 3rd Block, Jayanagar… Bangalore - 560 011.

Secretary to the Govt. Social Welfare Dept, Vidhana soudha, Bangalore.

Secretary to Govt, Ministry of Home Affairs Dept of personnel & Administrative Reforms) Govt of India. New Delhi.

Chairman, Superintendent of Police, Civil & Enforcement cell. (C.I.D.) Davanagere.

We appeal your goodself to intervene in the matter. Action taken in this matter may please confirmed.

Looking forward,

Yours faithfully,
(V.SRINIVASAN)

## தமிழகத் தாழ்த்தப்பட்டோரை ஏற்க மறுக்கிற கன்னட வெறித்தனம்

கருநாடகாவில் 'பத்ராவதி' என்பது ஒரு தொழில் நகரம். அங்கு தமிழ், தெலுங்கு மொழி பேசும் மக்களும் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். ஆதி திராவிடர் (எனப்படும் 'பறையர்'களும்) ஆதி ஆந்திர மக்களும் பெருமளவில் உள்ளனர். இவர்கள் ஏறத்தாழ மூன்று, நான்கு தலைமுறையாக அங்கு வாழ்ந்து வருபவர்கள்.

இப்போது தங்களின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க 'சாதி சான்றிதழை' அங்குள்ள வட்டாட்சியரிடம் சென்று கேட்டால், 'நீங்கள் தமிழர்கள்/தெலுங்கர்கள் உங்களுக்கு அந்த அளவு சான்றிதழ் வழங்க முடியாது" என்கிறார்.

மேலே கூறப்பட்டவர்களின் பங்கீட்டுக் ரேசன் கடைப் பொத்தகம், வாக்குரிமைச் சான்று எல்லாம் இங்கே இருந்தும் சாதிச் சான்றிதழ் கொடுப்பதில்லை.

அதைப் பெறுவதற்காக ஏறத்தாழ பல்வேறு வகையில் அவர்கள் போராடி வருகின்றனர்.

'பத்ராவதி தமிழ்ச் சங்கம்' - என்று ஒன்று ஏற்படுத்தி தமிழ்க் கல்வியையும் அங்குள்ள மக்களிடம் கொடுத்து வருகின்றனர்.

"சிவமுகா மாவட்ட அரசு தமிழ்ப்பள்ளிகளின் கல்வி வளர்ச்சிக் குழுக்களின் அமைப்பு" - என்றும் ஓர் அமைப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

இத்தகைய அமைப்புகளின் வாயிலாக அரசிடம் பலமுறை முயன்றும் 'சாதிசான்றிதழ்' பெற முடியாமல் அல்லல்படுகின்றனர்.

இந்திய ஓர்மையை வாய்கிழிய பேசுகிற இந்தியப் பார்ப்பன அரசால் ஒரு சாதி சான்றிதழைத் தருகிற அளவில் கூட இந்திய ஒற்றுமையைப் பேண முடியவில்லை.



படிப்பகம்

தனடாமங்கிறது இப்ப எங்கங்க இருக்கு எல்லாம் ஒன்னா ஆயிடுச்சி.. தீண்டாமை ஒழிப்பு சட்டத்த ரொம்ப தவறா பயன்படுத்திக்கிறாங்க" என்கிற பயல்களை எல்லாம் அனுப்பி வையுங்கள் தஞ்சைக்கு அருகில் உள்ள குருங்குளத்துக்கு.

அங்கே மாரியம்மன் கோவில் திருவிழா நடந்தால் தாழ்த்தப்பட்ட இன மக்கள் ஊர்வலத்தில் தனியாக

# குருங்குளம் ஒரு நாள் வெண்மணியாகலாம்!

வரவேண்டும். அப்படித் தவறி மேல்சாதிக் (கள்ளர்) காரர்களுடன் கலந்துவிட்டால் அடி உதை. கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் போகக்கூடாது. அவர்கள் சுமந்து வரும் பால் குடத்தின் பாலில் சாமி குளிக்கக் கூடாது. அதற்கு ஒரு தனி தொட்டி. ஏன் என்று கேட்டால் அடி, உதை, பொய் வழக்கு. இவ்வளவு கொடுமைக்கும் பின்னர் அவர்கள் தீண்டாமை இழிவின் மிச்ச சொச்ச அடையாளமாக இருந்து கொண்டிருக்கும் தப்படித்தல், மாடு தூக்குதல், பிணம் சுடுதல் போன்ற தொழிலை செய்வதில்லை என மறுத்தால் காவல் துறையே கட்டை பஞ்சாயத்து பேசி தப்படிக்க நிர்ப்பந்திக்கிறது. அதற்கும் மசியாத தாழ்த்தப்பட்ட மக்கள்மீது சாதிப் பெயரைச் சொல்லி இழி சொற்கள். அவர்கள் பி.சி.ஆர். காவல் நிலையம் சென்றால் அங்கும் நியாயம் கிடைக்கவில்லை. தப்படிக்க, சாதித் தொழில் செய்ய மறுத்துவிட்ட காரணத்திற்காகவும், ஏதோ நடவடிக்கை எடுத்து கிழிக்கப்போகிறார்கள் என நம்பி சாதி இழிவு கூறி அடித்த மேல் சாதியினர் வீட்டினை பி.சி.ஆர் போலீஸாரிடம் அடையாளம் காட்டியக் குற்றத்திற்காகவும்? தோழர் குருமூர்த்தி என்பவரை கட்டிவைத்து இடதுகை பெருவிரல் அறுக்கப்பட்டு அவரது வலது கை கட்டை விரல் துண்டிக்கப்பட்டுமுள்ளது. அங்கே இருக்கிற மக்கள் கலை இலக்கிய கழக அமைப்பு இந்தக் கொடுமையை முன் வைத்து நீதி, நியாயம் கேட்டது.

இந்த நிலையில் குருங்குளம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடைகளில் பொருட்கள் விற்பது இல்லை. வயல்வெளிகளில் தாழ்த்தப்பட்டோரின் ஆடு, மாடுகளை மேய விடுவதில்லை; தாழ்த்தப்பட்டோருக்கு வேலை தருவதில்லை என்ற பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படப் போவதாக தாழ்த்தப்பட்டோரும், விதிக்கப்பட்டுள்ளதாக கள்ளர்களும் தெரிவிக்கிறார்கள்.

எந்நேரத்திலும், மீண்டும் கலவரம் வெடிக்கலாம். அது ஆடு, மாடுகள் வயலில் சென்று மேய்வதிலிருந்து தொடங்கலாம் என்ற பதட்டம் இன்னமும் குருங்குளத்தில் நிலவுகிறது.

இந்தக் கொடுமைக்கான முதல் சம்பவம் 14-4-1994ல் ஆரம்பித்தது. ஆனால் அம்பேத்கரின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள் இக்கொடுமையை வெளி உலகுக்கு காட்ட மறுத்துவிட்டன. எதற்காக அம்பேத்கர் பிறந்த நாள் கொண்டாடப்பட்டதோ தெரியவில்லை. அண்மையில் தஞ்சையில் நடந்த குடியரசு கட்சியின் மாநாட்டில் கூட இந்தக் கொடுமையை எதிர்த்து ஒரு கண்டனத் தீர்மானம்கூட நிறைவேற்ற முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனோ தெரியவில்லை, அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அமைப்புகள் இதில் கவனம் செலுத்தவில்லை. ஒருவேளை வெண்மணி நிகழ்ச்சி போல் குருங்குளத்திலும் நடந்தால் அதை வைத்து விழாக்களும், அரசியலும் நடத்துவார்களோ என்னவோ!



குருங்குளம் பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை அமுல்படுத்தி அதன் பயன்களை உடனடியாக கிடைக்க அரசு உடனடி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

எனவே இதனை வலியுறுத்தி எதிர்வரும் 17-10-1994 அன்று கும்பகோணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள், தீண்டாமை எதிர்ப்பாளிகள், சனநாயக சக்திகள், பிற்பட்டோரில் தீண்டாமைக்கு எதிரானவர்கள் அனைவரும் இப்பேரணியில் பங்குபெற்று குருங்குளம் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தினையும், ஆதரவற்றோர் என அவர்கள் நினைக்கும் நிலையையும் போக்க வேண்டுமென்று கீழே குறிப்பிடப்பெறும் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

**தலித் பண்பாட்டு பேரவை திருவள்ளுவர் மன்றம், அறிவியக்கப் பேரவை, அம்பேத்கர் இளைஞர் பேரியக்கம், செட்யூல்ட் இன விடுதலை இயக்கம், பாவேந்தர் மன்றம், தமிழக மனித உரிமை கழகம், மனித உரிமை ஆதரவாளர்கள், மற்றும் திரைப்பட விமர்சனக்குழு.**

# 'மக்கள் தமிழக'த்தின் மீது அரசு வழக்கு!

கடந்த 'உழைக்கும் மக்கள் தமிழகத்தின்' 6-ஆம் இதழில் வெளியான ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் வெறித்தனங்கள் பற்றி வெளியான கட்டுரை வகுப்பு வாதத்தைத் தூண்டுகிறது என்று இந்து முன்னணி, சென்னை மாவட்டப் பொறுப்பாளன் ஸ்ரீதரன் கொடுத்த மனு வின் கீழ் - மக்கள் தமிழகத்தின் ஆசிரியர் பொழிலன் மீது உளவுத் துறையினர் வழக்குத் தொடுத்துள்ளனர்.

வழக்கு சென்னை - எழும்பூர் வழக்கு மன்றத்தில் நடக்கிறது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

## நாலு மூலைக்கிணறு

### தாழ்த்தப்பட்டோரின் எழுச்சியைக் குலைக்கும் கைக் கூலிகள்!

இன்றைக்கு இரண்டாண்டுகளுக்கு முன்னால் - 28.1.92 - அன்று நாலு மூலைக் கிணறு சிற்றூரையே குதறித் தள்ளியது போலீஸ் வெறிநாய்க் கூட்டம். துப்பாக்கிச் சூடு, வீடுகள் சூறையாடல், குழந்தைகள் வீசியெறியப்படல், பெண்கள் மீது வன்முறை என்று தாண்டவம் ஆடின அரசின் காவல் நாய்கள். அதைக் கண்டித்து அன்றைக்கு வெகுண்டெழுந்தது ஒடுக்கப்பட்டோர் பட்டாளம்.

சட்டத்தின் கதவுகளை ஓங்கித் தட்டியது.

அதன் காரணமாக வழக்கு முடிகிற சூழலில் இன்றைக்கு சில போலீசார் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர்.

இந்த நிலையில் சமரசத்திற்கு வருகின்றன போலீஸ் ஓநாய்களும், அவற்றிடம் நக்கிப் பிழைக்கும் நாய்களும். சமாதான முயற்சி பலன் அளிக்காததால் அரசின் கைக் கூலியாய் இருக்கிற ஜான் பாண்டியன் ஆட்களும், போலீசும் நாலுமூலைக் கிணறு மக்களை வந்து மிரட்டிச் செல்கின்றனர்.

மிரட்டப்படுகின்றனர் மக்கள். சட்டம் கண்களை மூடிக் கொண்டிருக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்களே ஒருங்கிணைவோம்!

ஆதிக்க அரம்பர்களையும், கைக்கூலிகளையும் விரட்டியடிப்போம்!.

## பெண்களுக்குத் துப்பாக்கி உரிமை தேவை!

### இந்தியக் குடியரசுக்கட்சி - மாநாடு தீர்மானம்!

****

அண்மையில் 21.8.94 – அன்று தஞ்சை திலகர் திடலில் இந்தியக் குடியரசுக் கட்சியின் தமிழ்நாடு அமைப்பு தன் மாநில மாநாட்டைக் கூட்டியது.

மாநாட்டை திரு.ஆ.சக்திதாசன், திரு.வ.கருணாகரன், மருத்துவர் திரு. சேப்பன் ஆகியோர் முன்னின்று நடத்தினர்.

மாநாட்டில் பன்னிரண்டு தீர்மானங்கள் முன்மொழியப் பட்டு நிறைவேற்றப்பட்டன.

அதில் 7–ஆவது தீர்மானமாக பெண்கள் தங்களின் பாதுகாப்புக்காக வைத்துக் கொள்ள ஆயுத உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றும் –

பன்னிரண்டாவது தீர்மானமாக இரட்டை வாக்குரிமையை நிறைவேற்ற வலியுறுத்தி தொடர் வண்டி மறியல் போராட்டம் நடத்தப்படுவது எனவும் இருந்தது.

ஒரு பக்கம் இப்படியான வகையில் சிறப்பாகத் தீர்மானங்களை இக்கட்சி இயற்றியிருந்தாலும் – மறுபுறம் ஆதிக்க அரசின் கொள்கையர்களும், சாதி வெறியர்களும் ஆன வாழப்பாடி இராமமூர்த்தி (காங்கிரஸ்), உபயதுல்லா (தி.மு.க.), ஜி. விசுவநாதன் (முன்னாள் அமைச்சர்) ஆகியோரை அழைத்து சாமரம் வீசக் காத்திருந்தது – ஒடுக்கப்பட்ட மக்களை அடகுவைக்கிற முயற்சியே ஆகும்.

## தோழர் சேகர் மறைவுக்கு வருந்துகிறோம்!

'தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் ஆதரவாளர் தோழர் சேகர் அவர்கள் கடந்த 2025, மடங்கல், *11*, (27.8.94) அன்று காலை 5.30 மணியளவில் நேர்ச்சி (விபத்து) ஒன்றில் மறைந்தது குறித்து மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானோம். வெங்காலூரைப் பொருத்த அளவில் அவரின் இழப்பு மிகப்பெரும் இழப் பானதாகவே அமைந்துள்ளது. அவர் இறப்புச் செய்தி அறிந்த அவர்தம் தாயார் மன அதிர்ச்சியில் மறு நாளே இறந்துவிட்ட செய்தி அவர் குடும்பத்தைப் பெரிதும் துணுக்குறச் செய்த செய்தியாகும்.



கடந்த 11.9.94 - அன்று தோழரின் மறைவு குறித்த நினைவு கூட்டம் நடைபெற்றது. வெங்காலூர் தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர். தோழர் பொன்மணி தலைமையேற்று நடத்திய அந்நிகழ்ச்சியில் தஓவிஇ. தோழர்கள் பாவேந்தன், பொழிலன், இளங்கோவன் ஆகியோரும் பிற அமைப்பினரும் கலந்து கொண்டு பேசினர் வெங்காலூர் 'ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்' நிகழ்ச்சியை ஒருங்கிணைத் திருந்திருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

### பெரியார் பிறந்தநாளில் பூணூல்களின் வெறியாட்டம்!

'ஹிந்துத்துவமே எங்கள் உயிர் மூச்சு!, 'ஜெய் ஸ்ரீராம் எங்கள் தாரக மந்திரம்!' - என்று பூணூல் போட்ட அனுமன் குரங்கை ஆடவிட்ட படத்தோடு பஜ்ரங்தள் என்ற அமைப்பு ஹிந்து இளைஞர் மாநில மாநாட்டை கடந்த செப்டம்பர் 17 அன்று நடத்தியது.

பெரியார் பிறந்த மண்ணில், பெரியார் பிறந்த நாளில் இந்த பூணூல்கள் கொட்டமிடுவதைத் தடுக்க வேண்டும் என்று ஈரோட்டில் தாகம், தஒவிஇ. உட்பட ஈரோட்டில் 42-அமைப்புகள் போராடின.

ஜெயலலிதா பாப்பாத்தி அரசும், பார்ப்பனிய போலீஸ் அதிகாரிகளும் விட்டுக் கொடுத்துவிடுவார்களா?

'பஜ்ரங்கதல்' மாநாட்டையும், பொதுக் கூட்டத்தையும் நடத்தவிட்டன.

ஐம்பது பேர் கூட இல்லாத அந்த பூணூல்களின் 'மா'நாட்டை ஈரோட்டில் நடத்த விட்டு விட்டு, அதைத் தடுக்க வேண்டும் என்று கூறிய 500 பேருக்கும் மேலான பல்வேறு அமைப்பினரையும் சிறைப் படுத்தியது ஆதிக்க வெறி போலீசு.


தந்தை பெரியார் சிலைக்கு மாலை போட்டுவிட்டு ஊர்வலமாய் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சென்ற இயக்கத் தோழர்களைத் தடுத்து நிறுத்தி சிறைப்படுத்தியது பார்ப்பனிய போலீஸ்.

பூணூல்களுக்கும், ஒண்ட வந்த பிடாரிகளுக்கு மானதாகவே நம் தமிழ்நாடு மாற்றப்பட்டு வருகிறது.

இந்நாட்டுச் சொந்தக் குடிமக்களுக்குக் கூட்டம் கூட்ட, ஊர்வலம் போகக் கூடத்தடை!

இந்நிலை எவ்வளவு காலம் நீடிப்பது?

தடுத்திட எழுச்சி கொள்ள வேண்டாமா நாம்!




### பார்ப்பனர்களை மட்டுமல்ல - பார்ப்பனியத்தையும் புறக்கணிக்காத "தமிழர் தேசியர்கள்"

பூணூலில் தான் பார்ப்பனியம் இருப்பதாக எண்ணிக் கொண்டு பூணூலைக் கழட்டி விட்டதாய்ச் சில பார்ப்பனரும், அப்படிக் கழட்டாமலேயே சில பார்ப்பனரும் உறுப்பினராய் இருக்கும் இயக்கம் - **தமிழர் தேசிய இயக்கம்.** அது உறுப்பியக்கமாக இருக்கும் **'தமிழ்த் தேசியத் தன்னுரிமை முன்னணி'**யும் ஏறத்தாழ அதே தன்மையினதே.

பார்ப்பனியத்தை எதிர்ப்பதாகக் கூறும் அதன் தலைவர் **பழ. நெடுமாறன்** இன்னும் பார்ப்பனியப் பண்புகளை மறுத்தவர் இல்லை - என்பது அண்மையில் சென்னையில் நடந்த அவர் மகன் திருமணத்தில் வெளிப்பட்டது.

முழுக்க முழுக்க வைதீக முறைப்படி - பிள்ளை (வால்) சமூகத்தின் ஆதிக்க நெறிப்படி - பூணூல் பார்ப்பனர்களின் வேத மந்திரங்களை ஏற்றுக் கொண்ட நிலையில் நடத்தப்பட்டுள்ளது அந்தத் திருமணம்.

சமூக நீதிக்காக (!) பாப்பாத்தி ஜெயலலிதாவோடு உறவாடும் நெடுமாறன் அவர்கள் ஏதோ தந்திரமாகத்தான் இப்படிச் செய்வதாகப் புகழ்ந்துரைக்கிற நெடுமாறன் கட்சியினர் இதற்கு என்ன புனைந்துரைக்கப் போகிறார்களோ... ●



படிப்பகம்

www.padippakam.com

## பார்ப்பனியத்தைத் தாங்கும் ஜெயலலிதாவின் போலீஸ்...

அருகில் உள்ள படங்களில் ஒன்று...

ஆந்திராவில் நடந்தது. பசுவதைத் தடைச் சட்டம் கொண்டு வரச் சொல்லி ஆர்ப்பாட்டம் நடத்தும் பாரதீய ஜனதாவினரின் போராட்டத்தை நசுக்குகிற ஆந்திரப் பார்ப்பனிய போலீசின் செயலைக் காட்டுகிறது.

அடுத்தபடம் இங்கு - முசுலீம் வாழும் தெருக்களில் நுழைய 'மிலாது நபி' ஊர்வலத்துக்குத் தடை விதித்துவிட்டு - பூணூல் பிள்ளையாரின் ஊர்வலத்தை நுழையவிட்டு பூணூலை உருவிக் கொண்ட போலீசு ஆணையர் இராஜ கோபாலனின் அரிய (!) படம்.

சென்னையில் அனுமன்குரங்கு வடிவத்தையும், பூணூல் பிள்ளையார் வடிவத்தையும் இணைத்துச் செதுக்கப்பட்ட கல்லுக்கு அபிஷேகம் (!) செய்து அரை நிர்வாணத்தில் இருக்கிறார் சென்னை போலீசு ஆணையர்.

பார்ப்பானுக்கும், பார்ப்பானின் பூணூலுக்கும் பாதுகாப்பு கொடுக்கிற இத்தகைய போலீசைக் கொண்ட ஜெயலலிதாவின் ஆட்சிதான் சமூக நீதி ஆட்சியாம்..

ஈரோட்டுப் பாதை எங்கே போகிறது...?







## முப்பெரும் விழாக்கள்!

"ஆகஸ்டு - 15 சுதந்திரம் பிறந்த நாள்
செப்-15 தமிழனுக்குச் சுவாசம் பிறந்தநாள்
செப்-17 தமிழனுக்குச் சூடு பிறந்தநாள்
அதேநாளில் சொரணையும் பிறந்ததால்
நாம் பிறந்தோம். ஆம் கழகம் பிறந்தது".

-முப்பெரும் விழாக்கவியரங்கில் கலைஞர் பாடிய பாடல் இது.

அண்ணா-பெரியார்-கழகம் பிறந்த முப்பெரும் விழா என்று ஆண்டுக்கொருமுறை தி.மு.க. முப்பெருவிழா நடத்தும். இந்த ஆண்டு இதில் ம.தி.மு.கவும் சேர்ந்து கொண்டதால் அறுபெரும் விழாவாக மாறியது.

தி.மு.க.வும், ம.தி.மு.க.வும், போட்டிப் போட்டுச் சுவர்களை நிரப்பின.

"நாய்களும் ஒப்பாத அடிமை வாழ்வை
ஆறுகோடித் தமிழரா ஒப்புவர்"

"WELCOME TO VAI-CO" என்றும் தாணுவால் சென்னை சாலையில் எல்லாம் எழுதப்பட்டிருந்த மதிமுக வின் சுவரெழுத்தைப் பார்த்துவிட்டு ஒருவர் கேட்டார்.

வை.கோ. என்ன தேம்ஸ் நதிக்கரையிலிருந்து கூவம் நதிக்கரைக்கா நடத்து வருகிறார் என்று....

கூவம் நதிக்கரைக்கு நடத்து வந்த வை.கோ.வோ எங்களுக்கும் புலிகளுக்கும் எந்தக் தொடர்பும் இல்லை, புலிகளை ஆதரிப்பவர்களைக் கழகத்திலிருந்து நீக்கிவிடுவோம் என்று தன்முப்பெரும் விழா அறிவிப்பை வெளியிட்டார்.

கலைஞரோ புலிகளுக்கும் வை.கோ.வுக்கும் உறவு இருக்கிறது என்று ஆற்காடு வீராசாமி, பரிதி இளம்வழுதிமூலம் சொல்லி வைத்தார்.

இதுபோக பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கருத்தரங்கம் என இரண்டு பக்கமும் நடந்த கூத்தாட்டங்களில் கலைஞரையும், வைகோவையும் புகழ்ந்து வாய்கிழித்து பேசினார்கள் திராவிடக் கொழுந்துகள்.

மொத்தத்தில் முப்பெரும் விழா என்கிற பெயரில் நடந்த கூத்தாட்டங்கள் எவ்வகையிலும் மக்களுக்கானதாக இல்லை என்பது மட்டுமல்ல.

தி.மு.கவுக்கும், மதிமுகவுக்கும் நடக்கும் விளையாட்டுப் போட்டி என்பதே உண்மை. தமிழகம் இன்னொரு விளையாட்டுப் போட்டியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

## நம்மை முனை மழுங்கச் செய்கிற
## — இந்து அமைப்புகளும் — கிறித்துவ நிறுவனங்களும் —

தாழ்த்தப்பட்டோருக்கான இயக் கங்கள் ஆயிரக் கணக்கில் புற்றீசல்களாய்க் கிளம்பியுள்ளன.

அவை, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடுவதற்காகவா —என்றால், இல்லை.

—எத்தனை ஓட்டுக் கட்சிகள் இருக்கின்றனவோ அத்தனைக்கும் தாளம் தட்ட எனப் பல இயக்கங்கள்.

—எத்தனை மதக் கொழுப்பர்கள் இருக்கின்றனரோ, அத்தனை பேருக்கும் விசிறி விட எனப் பல அமைப்புகள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை, சகதிகளுக்குள் கிடக்கிறபோது அவர்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லிக் கொண்டு இப்படியாகக் கிளம்புகின்றன இயக்கங்கள்.

ஓட்டுக் கட்சிகளின் வாய்க்கரிசியை, மதக் கொழுப்பர்களின், நடிக-நடிகைகளின் பிச்சைகளை வாங்கிக் கொண்டு இவ்வியக்கத் தலைவர்கள் அவர்களுக்காகச்செய்கிறகூலிவேலைகள்— ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்களைப் பச்சையாக ஏமாற்றுகிற வேலைகளாகவே அமைந்திருக்கின்றன.

ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கான இயக்கங்கள் இப்படியாக இருக்கிறபோது சாதியைக் கொண்டு மக்களைப் பிரித்து, அடிமைச் சாதி மக்களைச் சக்கையாய்ப் பிழிந்தெடுக்கின்றனர் அரசாங்கத்தினரும், பணக்காரர்களும்.

மூடநம்பிக்கைகளைப் பரப்பி, நச்சுக் கருத்துகளை விதைத்து சாதியத்தை இறுக்கமாய் வாழ்வித்துக் கொண்டிருக்கிறது பார்ப்பனியம்.

தாமே ஒருபுறம் தாழ்த்தப்பட்டோரை ஊரைவிட்டு விலக்கி வைத்துவிட்டு, மறுபுறம் இந்து என்ற போர்வை போர்த்தி அழைத்து வைக்கின்றது பார்ப்பனியம்.

'நாம் இந்துக்கள் இல்லை' —என்று தலைவர்கள் இரட்டைமலை சீனிவாசன், பண்டிதர் அயோத்திதாசர், அம்பேத்கார் பாடாய்ப் படித்தும், 'நாம் அரசியல் கட்சிகளுக்கு அடிபணிய வேண்டாம், நம் சமூகத்தைப் பற்றி கற்போம், கிளர்ந்தெழுவோம், அணி சேர்ப்போம் —என்று இடியாய் இடித்தும் கூலிக்காக இன்றைய ஒடுக்கப்பட்ட சமூகத் 'தலைவர்கள்' வரிசையாய் நின்று தம் மக்களைக் காட்டிக் கொடுக்கிற வேலை கொலை பாதகமான வேலை.

நிலை ஒருபுறம் இப்படி இருக்க ஆதிக்கர்களை நேரடியாக அடையாளம் காணமுடியாதபடி, பார்ப்பன மேல்சாதியர் எப்படி 'இந்துப் போர்வை'யைத் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது போர்த்தி தாழ்த்தப்பட்டோரை விலை பேசுகிறார்களோ — அப்படியே - 'டங்கல்' — என்றும் 'புதிய பொருளாதாரம்' — என்றும் கூட்டு வைத்து ஆதிக்கம் செலுத்துகிற பணக்கொழுப்பெடுத்த நாடுகள் 'கிருத்துவப் போர்வை'யைத் தாழ்த்தப்பட்ட மக்களின் மீது போர்த்தி விலை பேசுகின்றன.

அன்றைக்கு — வெள்ளைக்காரன் வந்தபோது — அவனோடு உள்ளே நுழைந்த கிருத்துவமதம், இன்றைக்குக் கால்பகுதி தாழ்த்தப்பட்ட மக்களைத் தனக்கு அடிமைப் படுத்தி வைத்திருக்கிறது.

அன்றைய கிருத்துவ மதத்தின் சீர்திருத்தங்கள் — ஒடுக்கப்பட்டோருக்கு வேட்டி, சட்டையைக் காட்டி தொடங்கிய வேலை — இன்றைக்கு அது மக்களின் இரத்தத்தை உறிஞ்சி குடிக்கிற அளவில் வந்து நிற்கிறது.

ஒரு புறம் இந்து மதமும்,


படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம் கிருத்துவ மதமும் போட்டி போட்டுக்கொண்டு ஏழை மக்களை எழவிடாமல் செய்து கொண்டுள்ளன.

இந்து மத வெறியாட்டங்களை — கிருத்துவ மதத்தினரோ கிருத்துவ மதப்பரப்பல்களை — இந்து மதத்தினரோ கண்டுகொள்வதில்லை.

சிறுபான்மை இசுலாமியரை, பௌத்தரை - பிற சிறுபான்மையரைத் தாக்கி அழிக்கிற, ஒடுக்குகிற இவை அண்மைக் காலமாக தங்களுக்குள் மோதிக் கொள்வதில்லை.

அன்றைக்கு சோவியத்து ரஷ்யாவுடன் கூட்டுவைத்த இந்தியப் பார்பனியம் கிருத்துவ மத மாற்றத்தை எதிர்த்தது. ஆனால் இன்றைக்கு அமெரிக்காவுடன் கூட்டு வைத்திருக்கிற இந்தியப் பார்ப்பனியம் கிருத்துவத்தை ஏற்றுக்கொள்கிறது.

காரணம் இருவரின் நோக்கமும் ஒன்றாய் இருப்பதே.

இந்தியப் பார்ப்பன பணக்காரர்களுக்கும் சரி — உலக பணக்கார அரசுகளுக்கும் சரி - நாம் அடிமைகளாக, கூலிகளாக, ஏதுமில்லாதவர்களாகவே இருந்திடவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். எனவே அவை இரண்டும் நம் ஏழை மக்களின் தலைவர்களை, இயக்கங்களை விலை பேசி விடுகின்றன.

ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான எழுச்சிகளை அதன் தலைவர்களைக் கொண்டே முனை மழுக்கித் திசை திருப்புகின்றன.

இளைய பெருமாள், வை. பாலசுந்தரம் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள் பலர் இந்திய, இந்து ஆதிக்கர்களிடம் விலைபோனவர்களாகவே உள்ளனர்.

அவர்கள் ஒருபோதும் சாதி அயோக்கியத்தனங்களைக் கட்டிக்காத்து வைத்திருக்கிற இந்தியப் பார்ப்பன அரசகளையோ, இந்துப் பார்ப்பனியத்தனங்களையோ எதிர்த்துப் போராடப் போவதில்லை. மாட்டுக்கு 'லோன்', ஆட்டுக்கு 'லோன்' வாங்கித் தருவதோடு மட்டுமாக நம் மக்களை மாடோட்டிகளாகவும், ஆடோட்டிகளாகவுமே வைத்திருக்கிற பெரிய (!) காரியம் செய்வதின் வழி பார்ப்பனர்களுக்கு முட்டு தாங்குகின்றவர்களாகவே அவர்கள் உள்ளனர்.

'ஜெபம் செய்து, சிலுவையை மாட்டிவிட்டு, 'அல்லோல்யா பாடி' - கிருத்துவர்களாக மாறிய அல்லது மாற்றிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓலைக் குடிசைகளை மாற்றித் தருவதாய்ச் சொல்லி விலை பேசுகின்றனர்.

சாதியச் சகதிகள் அழிக்கப்படாமல், பார்ப்பனக் கொழுப்பர்கள் மிதிக்கப்படாமல், பணக்கார அரசுகள் விரட்டப்படாமல் நமக்கு விடுதலை இல்லை என்பதை அவர்கள் ஒருபோதும் செயலுக்குக் கொண்டு வரப் போவதில்லை.

ஆதிக்க 'இந்து மதத்துக்குள் உள்ளடக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் எப்படி இந்து மத ஆதிக்கத்திற்கு எதிராக - அது தழுவி நிற்கிற இந்திய ஆதிக்கத்திற்கு, பார்ப்பன ஆதிக்கத்திற்கு, ஆதிக்கச் சாதியத்திற்கு இவற்றைக் கூட்டாய் ஒரு முகப் படுத்திச் செயலாற்றிக் கொண்டிருக்கிற அரசுகளுக்கு எதிராகப் போராட வேண்டுவதாய் இருக்கிறதோ அப்படியே —

ஆதிக்கக் கிருத்துவத்திற்குள் உள்ளடக்கப்பட்ட ஒடுக்கப்பட்டோர் கிருத்துவ ஆதிக்கத்திற்கு எதிராகவும் - அது தழுவி நிற்கிற வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு - இந்தியப் பார்ப்பன அரசுகளுக்கு எதிராகவும் போராட வேண்டியதாய் இருக்கிறது.

இப்படியாகப் போராடாத நிலையில் - இந்து மதத்திற்குள் உள்ளடக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட அமைப்புகளையோ, கிருத்துவமதத்திற்கு மாற்றப்பட்ட ஒடுக்கப்பட்ட இயக்கங்களையோ நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல -அவற்றை விரட்டியடிக்கவும், அவற்றின் வேரறுக்கவும் வேண்டும்.

அதுவே - இன்றைக்கு முற்போக்காய்ச் சிந்தித்துச் செயலாற்ற கிளம்பியுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் கடமையாகும்.

அது போலவே—

'அந்தோணி ராஜ்', 'பாக்கிய நாதன்' — போன்ற நூற்றுக்கணக்கான 'பாத(க)ர்'கள் (father) பணக் கொழுப்பெடுத்த நாடுகளுக்கு விலைபோனவர்களாகவே உள்ளனர்.

அவர்கள் ஒருபோதும் அமெரிக்க வல்லரசுகளையோ, டங்கல் உறவுகளையோ, கிருத்துவ நிறுவனங்களையோ, ஆதிக்கர்களையோ, இந்து வெறியர்களையோ எதிர்த்துத் தாமாகப் போராடப் போவதில்லை.

ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைக்காகப் போராட்டம் நடத்துவதை நேரடியாக ஒடுக்குகிறது இந்துப் பார்ப்பன அரசு எனில் - ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களைத் தூண்டிவிட்டோ அல்லது உடன் இருந்தோ 'குழி பறிப்பு வேலை' செய்து சாய்க்கின்றது வல்லரசின் துணையில் உள்ள இந்த கிருத்துவ நிறுவனங்கள்.

சலுகைகளைக் காட்டி - உரிமையை மறக்கடிக்கின்றன.

தாழ்த்தப்பட்ட கிருத்துவர்களுக்கு இடஒதுக்கீட்டுச் சலுகைக்காகப் போராட வேண்டுமாய்க் குரல் எழுப்புகிற கிருத்துவ நிறுவனங்கள் - கிருத்துவ மதமும் - அதன் மதவியல் ஆதிக்கமும்உறவு கொண்டாடிடும் இந்தியப் பார்ப்பன அரசின் கட்டமைப்பையோ, அது தாங்கிப் பிடித்திருக்கிற வல்லரசிய உறவுகளையோ வீழ்த்துகிற எந்தப் பணியையும் செய்ய முன் வருவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# மடல்கள்

● மடங்கல் - இதழ் படித்தேன். அதில் 'தமிழகத்தில் ஒரு வீராங்களை' - என்ற தலைப்பில் அமைந்த தொகுப்பு மிக அருமை. திசம்பர் 6 இல் நடக்க இருக்கும் சங்கர மட இடிப்புப் போராட்டத்திற்கு வாழ்த்துகள்.

**- சிவக்குமார்,** மிமிசல்.

● தோழர்களே எந்த ஒரு விடுதலையும் தாழ்த்தப்பட்ட மற்றும், பிற்படுத்தப் பட்ட மக்கள் இல்லாமல் சாத்தியம் இல்லை. நீங்கள் உங்கள் சிந்தனையில் குறிப்பிட்டது போல அவர் அவர்களுடைய தேவைகளை அவரவரே போராடிப் பெறட்டும் என்பது சரியல்ல இது பிற்படுத்தப்பட்ட மக்களை ஒதுக்கி தனிமைப்படுத்துவதாகும். இது பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்றிணைக்காது. அவர்களுக்குள் பிரிவினையை மேலும் வலுப்படுத்தும்.

மக்கள் விடுதலைப் போராட்டம் என்பது போராடும் மக்கள் அனைவரையும் ஒன்று படுத்த வேண்டுமேயன்றி. அவர்களை நாமே தனிமை படுத்தக் கூடாது. எனவே தாழ்த்தப் பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவோம். அவர்களின் ஒருமைப்பாட்டின் மூலம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுங்கள்.

**- உமர்கயான், கோவைச் சிறை**

● "அக்டோபர் உழைக்கும் மக்கள் தமிழகம்" பூத்தேன். திசம்பர் 6. பட்டியலில் முதல் பெயராக என் பெயரை பதித்து விடுங்கள். தோழர் சுந்தரராசனார், மருத்துவர் சேப்பன் அசர்களின் ஒருங்கிணைப்பு துர வேற்கதக்க ஒன்று. ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி இனி யாராலும் தடுத்து நிருத்த முடியாது. "இட ஒதுக்கீடு என்பது ஒடுக்கப்பட்டவனின் பிறப்புரிமை" இடஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலை ஒடுகாளி அரசியலர்கள் புரிந்து கொள்ள மறுப்பதேன்? "தாழ்த்தப் பட்டவனின் இட ஒதுக்கீட்டில் கை வைத்தால் இந்தியாவே இருக்காது" என்பது பார்பன பணியா கும்பல்களுக்கும் தெரியும். அதனால் அதை முடக்க தனியார் மையப்படுத்துவதை தடுத்து நிறுத்த போராட வேண்டும். இட ஒதுக்கீடு மட்டும் ஒடுக்கப்பட்ட தமிழ் சேரியனுக்கு நிரந்தர நிர்வாகி விடாது. பெரியார் சொன்ன தன் மானத்தை விட இன மானமும், இனஞாலமும் வேண்டும். அப்போது தான் தன்னெழுச்சியாக போராட துணிவான். இட ஒதுக்கீடு என்பது சாதிக்காகத்தான். வருணாசிரம கொள்கை இருக்கும் வரை அதாவது இந்த நாட்டில் இந்து மதம் இருக்கும் வரை இடஒதுக்கீடு இருந்தே ஆகவேண்டும். சாதியின் பெயரால் மறுக்கப்பட்ட உரிமைகள் சாதியின் பெயராலேயே கிடைக்க வேண்டும். உலகில் எந்த மதமானாலும் மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு தடையாகவே உள்ளது. அதனால் மதவெறி சாய்ப்போம். ஆதிக்க சாதி வெறியினை அழிப்போம். இந்த இந்தியாவில் ஒடுக்கப்பட்ட சேரித் தமிழனாலேயே ஒரு மாபெரும் புரட்டசியை உருவாக்க முடியும் என்பது தனது திடமான நம்பிக்கை. அதனால் ஒடுக்கப்பட்ட பேரினம் ஒன்று திரள வேண்டும். தங்களின் மேலான பணி சிறக்க வாழ்த்து கிறேன்.

**– செ. இராசேந்திரன், புதுவை**

● கேடான சங்கர மடத்தை பலரும் மண்டியிட்டு கிடக்கையில் தங்களின் தமிழர்களை இயக்கம் ஒன்று தான் அதனை இடித்து தள்ளும் நல்ல பணியை மேற்கொண்டுள்ளது. இதனை நான் பெரிது வரவேற்று பாராட்டுகிறேன்.

**– ச. நாத்திகநந்தனார்.**

● இட ஒதுக்கீட்டு கொள்கை பற்றிய நிகழ்ச்சிகளையும் செய்துள்ளீர்கள். எழுச்சிப் பயணங்கள் - பற்றிய விமர்சனம் சரியானது. ஆனால் இறுதி முடிவில் புறக்கணிப்போம். என்று அறை கூவல் விடுவது தவறானது. அதாவது சனநாயகத்திற்கு எதிரான தாகும். இது நம்மிடம் உள்ள இடதுசாரி மனோபாவத்தை வெளிப்படுத்து கின்றது. புலிகளுக்கு புத்தி சொல்லும் நாம், புலிகளின் அப்பாவித்தனத்தை சனநாயக விவாத நடவடிக்கைகளை பின்பற்றக் கூடாது. நாம் புலிகளைவிட பல மடங்கு அரசியல் தெளிவு உள்ளவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். தொடர்ந்து உங்கள் பணி என்போன்றவர்க்கு உற்சாகத்தை அளிக்கின்றது.

**– சி. தமிழ்ச் செல்வம். புதுவை.**



## விடுதலைக்கான களத்தில்

● கடந்த 27.8.94 - அன்று தமிழகத் தாழ்த்தப் பட்டோர் விடுதலை முன்னணி கோவையில் மிகப்பெரும் கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

கோவை சின்னாம்பதியில் பழங்குடி மக்களின் மீது பாலியல் வன்முறையை ஏவி விட்ட போலீஸ் வெறியர்களைக் கண்டித்தும் -

சாமாளபுரம் சக்கிலியர் மக்கள் மீது தாக்குதல் நடத்திய ஆதிக்கச் சாதி வெறியர்களைக் கண்டித்தும் -

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் தோழர் திருமாவளவன் மீது போடப்பட்ட பொய் வழக்கைக் கண்டித்தும் -

பொள்ளாச்சி தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகளை அகற்றிய அரசைக் கண்டித்தும் இக் கண்டனப் பொதுக் கூட்டம் நடந்தது.

இப்பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இரா. திருமாவளவன், அரங்க–குணசேகரன், கு. இராமக் கிருட்டிணன், தமிழ்ச் செல்வி, கலியாண சுந்தரம், ஏகலைவன், விசயகுமார், தமிழ்மணி ஆகியோர் கண்டனவுரையாற்றினர். தோழர் குப்புராசு தலைமை தாங்க, தோழர் பொழிலன் தீர்மானங்கள் படிக்க, தோழர் அதியமான் நன்றியுரை கூற கூட்டம் முடிவுற்றது.

● கடந்த 27.8.94 - அன்று ஈரோட்டில் 'விடியல்' - என்கிற அமைப்பு தொடங்கப்பட்டது. தொடக்க விழா பட்டிமன்ற நிகழ்ச்சியில் தோழர்கள் ஓவியா, அப்துல்காதர், புவனா, இரணியன், கயல் ஆகியோருடன் த.ஒ.வி.இ. தோழர் இளங்கோவன் கலந்து கொண்டு உரையாற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com

# மார்வாடியை வாழவைக்க மண்ணின் மைந்தர்கள் சுட்டுத் தள்ளப்பட்டனர்!

# பறையரின் உயிர் மயிருக்குச் சமமா?



- கடந்த 27.8.94 - அன்று சென்னையில் 'தலைநகர் தமிழ்ச் சங்கம்' முதல்வர் செயலலிதா வீட்டு முன் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

பள்ளிக் கூடங்களில் ஆங் கிலத்திலேயே இரு நாட்கள் பேச வேண்டும் என்ற அரசு ஆணையைக் கண்டித்து அந்த ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

பல்வேறு அமைப்பினரும் கலந்து கொண்ட அந்த ஆர்ப் பாட்டத்தில் சென்னையி லிருந்த த.ஒ.வி.இ. தோழர் களும் கலந்து கொண்டனர். பாவலரேறு பெருஞ்சித் திரனார், பேரா. சாலை இளந்திரையன், தியாகு, சுபவீ. மற்றும் பலருடன் நம் தோழர் களும் அன்று தளைப்படுத்தப் பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

- கடந்த 10.9.94 அன்று தோழர் கோ.கேசவன் எழுதிய 'சமூக விடுதலையும், தாழ்த்தப் பட்டோரும்' எனும் நூலின் விமர்சனக் கூட்டம் சென்னை யில் நடந்தது.

தோழர் ஆர்.கே.சுவாமிநாதன் தலைமை தாங்க, தோழர் இல.கோவிந்தசாமி வர வேற்புரை நடத்தினார். தோழர்கள் டி.எஸ்.எஸ். மணி, தங்கராசு, நடராசன், திருமாவள வன் ஆகியோருடன் தஒவி.இ. சார்பில் தோழர் பொழிலனும் கலந்து கொண்டு நூல் விமர்சனம் செய்தார்.

'இந்து முன்னணி'யைப் பிரபலப் படுத்த வழக்கம்போல் தன் அமைப்பில் உள்ள யாரேனும் ஒரு தலைவரைக் கொன்று அதன் மூலம் அமைப்பை வளர்கிற இந்து முன்னணியின் தந்திரத்திற்குப் பலியானார் அதன் தலைவர் ராஜகோபாலன்.

அந்த ஆள் கொலை செய்யப் பட்ட உடனே என்னமோ நாடே நாசமாய்ப் போனதுபோல் ஜெய லலிதா தனது மடிசாரை இழுத்துக் கட்டிக் கொண்டு இழவு கேட்கத் தொடங்கிவிட்டார்.

ஆனால் அதே நாள் – செங்கல் பட்டு அருகில் 'எங்களின் நிலம் எங்களுக்கே சொந்தம்' என்று முழுங்கி அதில் அம்பேத்கர் சிலையை நிறுவினர் தமிழகத்தின் மண்ணின் மைந்தர்கள்.

அந்த நிலம் மார்வாடியுடையது என்று அவன் கொடுக்கும் எச்சைக் காசை வாங்கி நக்கிப் பிழைக்கிற போலிஸ் வெறியர்கள் அம்பேத்கர் சிலையைத் தூக்கி எறிந்ததுடன் அதற்குப் போராடிய தாழ்த்தப்பட்ட மக்களைச் சுட்டுத் தள்ளியிருக் கின்றனர்.

ஒண்ட வந்த பிடாரிகளின் சொகு சான வாழ்க்கைக்காக நம் சமூகங் கள் ... ஒண்டக் குடிசையில்லாம் வாடுகிறது.

இந்து முன்னணி
ராஜகோபாலனுக்கு ஒரு நீதி
செங்கல்பட்டு –
தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு நீதி
ஒடுக்கப்பட்ட மக்களே
உணருவோம்
உரம் பெறுவோம்!

## வரப்பெற்றோம்:

- **சிறை உடைக்கும் காவிரி** - தொகுப்பாசிரியர். சோலைப் பிரியன், சூத்திரன் வெளியீடு, 29, அப்பாசி தெரு, ச. கோடியூர், சோலையார் பேட்டை - 635 851, அம்பேத்கார் மாவட்டம். விலை உரூ. 6.00
- **மார்க்சியம் – அ...ஆ...** ஆசிரியர் : தியாகு, நிறைமதி வெளியீட்டகம், 69, காக்கா தோப்புத் தெரு, மதுரை-625 001. விலை : உரூ. 5.00
- **நெருப்பாற்றில் எதிர்நீச்சல்** - ஆசிரியர் : பாவலரேறு பெருஞ் சித்திரனார், வெளியீடு : பஃறுளி பதிப்பகம், 183, வெங்கட்டரங்கம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5, விலை. உரூ.6.00.
- **கிளர்ச்சிக் கனல்** - மாத இதழ், ஆசிரியர்: மாயாண்டி, கே-16 வெங்கடாபுரம், சென்னை-15, விலை - உரூ.4.00
- **நீலக் கொடி** - மாத இதழ், ஆசிரியர் டேவிட் அம்பேத்கர், 15, என்ஜினியர் தெரு, ஆவடி, சென்னை - 54.
- **தமிழினமே எழுக** - மாத இதழ், ஆசிரியர்: செங்கோலரசு, பாவேந்தர் தமிழ் இலக்கியப் பாசறை, 122 - பாரதிநகர், மூலப்பாளையம், ஈரோடு - 638 002.
- **காந்தி – அம்பேத்கர் கருத்து மோதல்** ஆசிரியர் பெ.தங்கராசு, வெளியீடு: அண்ணல் அம்பேத்கர் எழுத் தாளர் பேரவை, எச்.ஐ.ஜி. 2/15, முகப்பேறு கிழக்கு, சென்னை-50. விலை : உரூ.18/-
- **பாட்டாளி முழக்கம்** (மாத இதழ்) ஆசிரியர் பெ.தங்கராசு, வெளியீடு: அண்ணல் அம்பேத்கர் எழுத் தாளர் பேரவை, எச்.ஐ.ஜி 2/15, முகப்பேறு கிழக்கு, சென்னை - 50, விலை உரூ.5.
- **தீப ஆராதனை** (ஒலி நாடா) அம்பேத்கர் பற்றிய பாடல்கள் பாடி வெளியிட்டவர் திரு. மணிமாறன், 187, காதர் செரிப் தோட்டம்,இலால்பாக் சாலை, பெங்களூர் - 560 027.

படிப்பகம்

www.padippakam.com

விலகுங்கள்,
டங்கல் வாகனம் இது!
தடங்கல் செய்யாதீர்!
கோட்டை வீடுகளில்
கோபுர மாளிகைகளில்
குளிரூட்டும் விடுதிகளில்
கும்மாளம் போட்டவர்கள்
பாரதத்தின் புத்திரர்கள்
பாவம் தாகத்தில் களைத்திருப்பார்.
இன்னும் ஆடவேண்டும் - அவர்களால்
இந்தியா உயரவேண்டும்
இப்போதை அவர்களுக்கு
கோகோ-கோலே வேண்டும்
தண்ணீர் வேண்டுமென்று
தணலில் அலைகின்றீரா?
தாகத்தால் சாகின்றீரா?
குடித்துப் பாருங்கள் கோகா-கோலா
குடிக்க முடியாவிட்டால் செத்து மடியுங்கள்
அவசரம்! வழிவிடுங்கள்
அமெரிக்க அப்பன்
ஆணை தந்து விட்டான்.
அசுரவேகத்தைத் தணிக்கமுடியாது!
அடம்பிடித்து அடிபட்டுச் சாகாதீர்.
இப்போது விலகுங்கள்!
தேர்தல் வரும்...
அப்போது வருகின்றோம்!
அதுவரை சாகாமல்
தப்பிப் பிழைத்திருங்கள்
உங்களுக்கும் தருகின்றோம்.
ஓட்டுக்கொரு கோகோ-கோலா!
பிடிக்காவிட்டால் பெப்சி-கோலா!

நர மன்ஜெ

